வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 05 | 10.06.2024 திங்கட்கிழமை | இதழ் : 162 | பக்கங்கள் : 12

# மூன்றாவது தடவையாக மோடி இந்திய பிரதமராக பதவியேற்பு

## நேருவின் சாதனை சமனானது ஜனாதிபதி ரணிலும் பங்கேற்றார்





புதுடில்லி, ஜூன் 10

இந்திய பாராளுமன்ற தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி (பா. ஜ. க.) தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்றது. இதையடுத்து தொடர்ந்து மூன்றாவது முறையாகவும் 73 வயதான நரேந்திர மோடி பிரதமராக நேற்றிரவு 7.15 மணிக்கு பொறுப்பேற்றார்.

புதுடில்லியிலுள்ள குடியரசு தலைவர் (ஜனாதிபதி) மாளிகையில் நடந்த பதவியேற்பு நிகழ்வில் ஜனாதிபதி திரௌபதி முர்மு மோடிக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

இதன் மூலம், இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவுக்கு (1952, 1957, 1962) பின்னர் மூன்றாவது முறையாக தொடர்ந்தும் பிரதமர் பதவியை வகிக்கும் தலைவர் என்ற பெருமை யும் மோடி பெற்றுள்ளார்.

பதவியேற்பு விழாவில் பதவியேற்பு விழாவில் பங்கேற்க வேண்டும் என பிரதமர் மோடியின் அழைப்பை ஏற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

11

## அமைச்சரானார் ஜெய்சங்கர்; மீளவும் வெளிவிவகார அமைச்சு?



புதுடில்லி, ஜூன் 10

இந்தியாவில் அமைச்சராக தமிழர்களான சுப்பிரமணியம் ஜெய்சங்கர், நிர்மலா சீதாராமன் ஆகியோர் மீண்டும் நேற்று பதவியேற்றுக் கொண்டார்.

இந்தியாவின் பிரதமராக மூன்றாவது முறையாக நேற்று நரேந்திர மோடி பதவியேற்றார். அவருடன், 30 பேர் கொண்ட அமைச்சர்களும் பதவியேற்றனர்.

ஜெயசங்கர், 2019ஆம் ஆண்டு முதன்முதலாக வெளிவிவகார அமைச்சராக பதவி வகித்திருந்தார்.

11

## ஒக்ரோபர் முதல் வாகன இறக்குமதிக்கு அனுமதி!

### நிதி இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் வாகன இறக்குமதி மீண்டும் ஆரம்பிக்கப்படும். இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபர் மாதம் முதல் பல கட்டங்களாக வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படும். முதலில் தொழில்துறை மற்றும் கனரக வாகனங்களுக்கு அனுமதி வழங்கப்படும். பின்னர் முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும்.

11

## இலங்கையின் பொறுப்புக்கூறலுக்கான அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துவோம்!

### அமெரிக்காவின் விசேட தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

இலங்கையில் நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவதை மையப்படுத்தி தொடர்ந்தும் பணியாற்ற எதிர்பார்ப்பதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் சர்வதேச குற்றவியல் நீதிக்கான சிறப்புத் தூதுவர் பெத் வான் ஷாக் தம்மிடம் கூறினார் என்று அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

11

## பொது வேட்பாளர் கோமாளிக்கூத்து; தமிழ் அரசு எதிராக பிரசாரம் செய்யும்!

### சுமந்திரன் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10


தமிழ் பொதுவேட்பாளர் என்ற கோமாளிக்கூத்துடன் எமக்கு உடன்பாடில்லை. இதற்கெதிராக மக்கள் மத்தியில் இலங்கை தமிழ் அரசு கட்சி பிரசாரம் செய்யும் என, அந்தக் கட்சியின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

சுமந்திரன் தரப்பினரின் ஏற்பாட்டில் நேற்று தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் "ஈழத் தமிழர் சுயநிர்ணய

11

## 13ஆவது திருத்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவேன்!

### கிளிநொச்சியில் சஜித் உறுதி



கிளிநொச்சி, ஜூன் 10

எமது ஆட்சியில் 13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். வடக்கு, கிழக்கு, மேல் என்று 9 மாகாணங்களின் மக்களுக்கும் இந்த வாக்குறுதியை நான் வழங்குகிறேன். 13ஐ நடைமுறைப்படுத்த நான் தயங்கப் போவதில்லை - என்று நேற்று கிளி நொச்சியில் வைத்து உறுதியளித்தார் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ.

நேற்று கிளிநொச்சிக்கு வந்த ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ பிரபஞ்சம் வேலைத் திட்டத்தின் கீழ் 225ஆவது கட்டமாக 11 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை பாரதி

11

## ஐ. தே. கவுடன் இணைவது என்ற பேச்சுக்கே இடமில்லை!

### ஐக்கிய மக்கள் சக்தி சொல்கிறது

கொழும்பு, ஜூன் 10

ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி இணைந்து கூட்டணி அமைப்பது குறித்து சிங்கப்பூரில் பேச்சுகள் நடைபெறவுள்ளன என்ற தகவலை ரஞ்சித் மத்தும பண்டார மறுத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரான அவர், ஐக்கிய தேசிய கட்சியையும் ஐக்கிய மக்கள் சக்தியையும் இணைப்பது குறித்து பேச்சுகள்

11



வேலையற்ற பட்டதாரிகள் யாழ். மாவட்ட செயலகம் முன்பாக நடத்திய போராட்டத்தில் பட்டத்தை பாடையில் ஏற்றிச் சென்று கவனம் ஈர்த்தனர்...!

12

## புதிய தே. அ. அட்டைக்கே கடவுச்சீட்டு வழங்கப்படும்

### குடிவரவு - குடியகல்வு திணைக்களம்

கொழும்பு, ஜூன் 10

புதிய தேசிய அடையாள அட்டை இல்லாத விண்ணப்பதாரர்களுக்கு கடவுச்சீட்டு வழங்குவதில்லை என்று தீர்மானித்துள்ளதாக குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

ஏராளமான விண்ணப்பதாரர்கள் பல தசாப்தங்கள் பழமையான தேசிய அடையாள அட்டைகளையே வைத்திருக்கின்றனர். கடவுச்சீட்டை

11

**உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி முன்நிறுத்துவது, தாங்களே ஊழலுக்கு எதிரானவர்கள் - ஊழல் இல்லாத ஆட்சியை அமைக்கக் கூடியவர்கள் என்பதுதான்.

நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டதற்கு முக்கிய காரணமே இந்த ஊழல் விவகாரம்தான் என்பதும் ஆராய்ச்சிகளுக்கு உரியதல்ல.

ராஜபக்ஷக்கள் ஆட்சி பற்றி பலரும் முதலில் முன்வைக்கின்ற குற்றச்சாட்டு இந்த ஊழல் விவகாரம்தான். ஆனால், அண்மையில் பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருக்கும் கருத்து நிச்சயம் பலருக்கும் கொடுப்புக்குள் சிரிப்பை ஏற்படுத்தியிருக்கலாம்.

"பொதுஜன பெரமுன கட்சியால் மாத்திரமே இந்த நாட்டில் ஊழல் அற்ற ஆட்சியை நடத்த முடியும்" என்று கூறியிருக்கிறார் நாமல் ராஜபக்ஷ.

அதுவல்ல முக்கியமானது. சில மாதங்களுக்கு முன்னர் லண்டனிலிருந்து வந்திருந்த நண்பர் ஒருவர் கொழும்பில் நின்றபோது பாட்டாலி சம்பிக்க ரணவக்கவை சந்திக்க விரும்பினார். அவரோடு அந்தச் சந்திப்புக்கு நானும் செல்ல வேண்டியதாயிற்று. சந்திப்பில் கலந்துகொள்வதற்காக அல்ல - நண்பரின் சாரதியாக.

அப்போது நண்பர் அவருக்கு சொன்னார், "ஜே. வி. பி. அடுத்த தேர்தலில் முக்கிய பிரசாரமாக முன்வைக்கவிருப்பது ஊழல் விவகாரம்தான். அத்தகைய நிலையில், அவர்களுக்கு எதிராகக் களம் இறங்கி கடும் போட்டியைக் கொடுக்கக்கூடியவர் நீங்கள்தான். நீங்கள் பொதுவேட்பாளராக களம் இறங்கினால் சுலபமாக வெற்றி பெற்றுவிடலாம்..".

இதைச் சொல்வதற்காகத்தான் அந்த நண்பர் அவரையே சந்திக்க விரும்பியிருந்தார் என்பதை பின்னர் அவரின் பேச்சிலிருந்து அறியமுடிந்தது.

இந்தச் சம்பவத்தை இப்போது எழுதுவதற்கு காரணம், தெற்கில் அரசியல் தலைவர்களில் ஊழலுக்கு எதிரானவர் - இதுவரை எந்த ஊழல் குற்றச்சாட்டுக்கும் ஆளாகாதவர் என்றால் அது பாட்டாலி சம்பிக்க ரணவக்க தான்.

யுத்தம் முடிந்த பின்னர், மகிந்த தரப்பினரோடு அவர் பயணிக்க வேண்டியிருந்தது. அவர் யுத்தம் நடந்துகொண்டிருந்தபோது மகிந்தவுக்கு யுத்த நடவடிக்கைகளில் உதவினார் என்பதால்தான் என்று நினைக்கின்றேன். அதனால் தான் அவரின் கட்சியான ஜாதிக ஹெல உறுமய, மகிந்தவின் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி என்ற கூட்டில் அங்கத்துவம் வகித்ததோடு, முக்கிய அமைச்சராகவும் இருந்தார். யுத்தம் முடிந்த பின்னர் இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டில் மின்சக்தி அமைச்சராக இருந்த அவர் சில ஆண்டுகளிலேயே மகிந்த அரசிலிருந்து வெளியேறியதுடன், பின்னர் மகிந்த அரசின் ஊழல்களை வெளிச்சம் போட்டுக்காட்டுபவராக மாறியிருந்தார்.

அவரோடு அண்மையில் தொலைபேசியில் பேசிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நீண்டநேரம் அவரோடு மனம் விட்டு பேசியிருக்கிறார்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனக்கான பிரசார பணிமனையை திறந்து வைப்பதற்கு முன்னதாக நடந்த இந்த சம்பாசணையின்போது, ரணில் சிலவேளைகளில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று தீர்மானித்தால், சம்பிக்கவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறும் தமது கட்சி அவருக்கு பூரண ஆதரவை வழங்கும் என்றும் கூறியிருக்கிறார் மகிந்தர்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதென்று முடிவுசெய்தால் சம்பிக்கவை அவரோடு இணைந்து பணியாற்றுமாறு கோரிக்கை விடுத்ததுடன், ரணிலுக்கு சிங்கள தேசியவாதிகளின் வாக்குகள் கிடைப்பது கஷ்டமானது என்பதால், சம்பிக்க அவரோடு இருந்தால் அந்த வாக்குகளை அவர் பெறுவது சுலபமாகிவிடும் என்றும் யோசனை தெரிவித்திருக்கிறார்.

இருவரும் இவ்வாறு பேசிய சில தினங்களிலேயே ரணில் விக்கிரமசிங்க தனது தேர்தல் பிரசார பணிமனையை திறந்துவைத்ததுடன், தனது பிரசாரத்தையும் தொடக்கியிருக்கிறார். அவரோடு ஏற்கனவே இணைந்துவிட்ட நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான சிறீ லங்கா சுதந்திர கட்சியின் பதினெழு பேர் கொண்ட அணியினர் அம்பாந்தோட்டை - அம்பலாந்தோட்டையில் கடந்த வாரம் மிகப்பெரிய கூட்டத்தை நடத்தி தமது பலத்தை வெளிப்படுத்தியதுடன் ரணிலுக்கான தமது ஆதரவையும் அறிவித்துவிட்டனர். அதாவது, ரணில் போட்டியிடுவது என்பது கிட்டத்தட்ட உறுதியாகியிருக்கின்றது.

இந்த நிலையில், மகிந்தவுடனான பேச்சுகளை அடுத்து ரணிலுடன் இணைவதற்கான வேலைத்திட்டம் ஒன்றை தயாரித்திருக்கிறார் சம்பிக்க என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

அவரின் சிறீ லங்கா குடியரசு முன்னணி என்ற கட்சி நேரடியாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி வைக்காமல், அநுர பிரியதர்சன யாப்பா தலைமையில் இயங்கும் புதிய கூட்டணியுடன் நிமல் லான்சா, நளின் பெர்னான்டோ, பிரசன்ன ரணதுங்க அணியுடன் தாமும் கூட்டணி வைத்துக்கொண்டு மெகா கூட்டணியாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையவிருக்கிறாராம் சம்பிக்க.

இவர்கள் இவ்வாறு ரணிலுடன் இணைந்து கொண்டிருக்க, சஜித்தையும் ரணிலையும் ஒரணியில் கொண்டுவரும் முயற்சியும் குழப்பமில்லாமல் நகர்ந்து கொண்டிருக்கின்றதாம்.!

**ஊர்க்குருவி.**

## புதிய ஜனாதிபதி 112 நாட்களில் பதவியேற்றாக வேண்டும்!

### ரிஷாத் பதியுதீன் எம். பி. தெரிவிப்பு

திருகோணமலை,ஜுன் 10

அரசமைப்பின்படி 112 நாட்களில் புதிய ஜனாதிபதி கதிரையில் அமர வேண்டும். ஜனாதிபதிக்கே பாராளுமன்றத்தை கலைத்து தேர்தலை நடத்த அதிகாரமிருக்கிறது என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை சாஹிரா கல்லூரிக்கு நேற்று சென்ற ரிஷாத் பதியுதீன் எம். பி. பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில்,

சாஹிரா கல்லூரி மாணவர்கள் எழுதிய அதே மண்டபத்தில் அதே உடை அணிந்து வேறு பாடசாலையின் முஸ்லிம் மாணவிகள்



பத்து பேர் பரீட்சை எழுதியிருந்தனர். அவர்களுக்கு பெறுபேறுகள் வெளியாகின. ஆனால், சாஹிரா கல்லூரி மாணவிகளில் மாத்திரம் கண்வைத்து இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வது அநீதியாகும்.

கடந்த பத்து வருடங்களாக இந்த கல்லூரியில் மருத்துவத் துறை, பொறியியல் துறைகளுக்கு அதிகமான மாணவர்கள் தெரிவாகுவது வழக்கம். எனவே, பரீட்சை பெறுபேறுகள் வெளியாக வேண்டும், இல்லாது போனால் பாராளுமன்றிலும் வெளியிலும் நீதிமன்றம் சென்றும் நீதியை இம் மாணவர்களுக்கு பெற்றுக் கொடுப்போம்.

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு அளிப்பது என்று கட்சியின் உயர்பீட முடிவின் பிரகாரம் யாருக்கு ஆதரவு வழங்கலாம் என முடிவுகளை தேர்தலின் போது அவ்வப்போது கட்சி முடிவுகளை வைத்து தீர்மானங்களை எடுப்போம். எந்தத் தேர்தலாயினும் சரி சில மாவட்டங்களில் தனித்தும், சில இடங்களில் இணைந்தும் போட்டியிடுவோம் - என்றார்.

(ஐ)

## சு. கவின் உள்ளக ஜனநாயகத்தை நாங்கள் உறுதிப்படுத்தியுள்ளோம்!

### அமைச்சர் நிமால் சொல்கிறார்

கொழும்பு, ஜுன் 10

சிறீ லங்கா சுதந்திர கட்சிக்குள் உள்ளக ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நீதித்துறை ஊடாக அதனை நாம் உறுதி செய்துள்ளோம். சட்ட ரீதியாக நாமே சுதந்திர கட்சியினராவோம் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சி இணைந்த புதிய கூட்டணியின் மக்கள் சந்திப்பு அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது நம்பிக்கை வைக்க முடியாது. அவரின் தலைமைத்துவத்தின் கீழ் தம்மால் சுதந்திர கட்சியுடன் கூட்டிணைய முடியாது. இதனை இங்குள்ள தரப்பினர் தெரிவித்தனர். ஆனால், தற்போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தானாக முன் வந்து இவர்களின் விருப்பத்தை நிறைவேற்றியுள்ளார்.

தற்போது புதிய கூட்டணி என்ற குழந்தை அம்பாந்தோட்டையில் பிரசவிக்கப்பட்டுள்ளது. அதனை இன்று மக்களிடம் ஒப்படைகின்றோம். மக்கள் தான் அதனை ஊட்டி வளர்க்க வேண்டும். எமது தேவை மீண்டும் குடும்ப ஆட்சியை தோற்றுவிப்பதோ, இராஜகுமாரியையும் இராஜகுமாரனையும்



உருவாக்குவதோ அல்ல. ஜனநாயக நாட்டை கட்டியெழுப்புவதாகும்.

தற்போது சிறீ லங்கா சுதந்திர கட்சிக்குள் உள்ளக ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நீதித்துறை ஊடாக அதனை நாம் உறுதி செய்துள்ளோம். சட்ட ரீதியாக நாமே சுதந்திர கட்சியினராவோம். வேறு எவரும் தம்மை சுதந்திர கட்சியினர் எனக் கூறிக் கொண்டு உரிமை கோர முடியாது - என்றார். (ஐ)

## மின்சார சபையை அரசு தனியார் மயமாக்க முயற்சி

கொழும்பு, ஜுன் 10

இலங்கை மின்சார சபையின் நிர்வாகத்தை சீரழித்து 12 பங்குகளாக பிரித்து தனியார்மயமாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் இதனை திருத்தியமைத்து புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

புதிய மின்சார சட்டம் தொடர்பில் உயர் நீதிமன்றம் தெளிவு படுத்தினாலும் மக்களின் உரிமையை ஐக்கிய மக்கள்



சக்தி பாதுகாத்துள்ளது. இலங்கை மின்சார சபையின் நிர்வாகத்தை சீரழித்து 12 பங்குகளாக பிரித்து தனியார்மயமாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தச் சட்டத்தின் மூலம் அமைச்சருக்கு குவிக்கப்பட்ட அதிகாரங்களை எமது ஆட்சியில் குறைப்போம்.

மன்னார் மற்றும் பூநகரி ஆகிய பகுதிகளில் நிர்மாணிக்கப்படவுள்ள அதானி நிறுவனத்தின் "அதானி கிறீன் எனர்ஜி" காற்றாலை மின் உற்பத்தியின் ஊடாக மின்சாரத்தை 20 வருடங்களுக்கு கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை இந்த அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

அதானியிடமிருந்து 32.8 டொலருக்கு மின்சாரத்தை கொள்வனவு செய்கின்றனர். இது மக்கள் உரிமையை மீறும் செயலாகும். புதிய மின்சார சட்டத்தின் ஊடாக ஊழல் மேலும் அதிகரிக்கும். ஐக்கிய மக்கள் சக்தியில் ஆட்சியில் இதனை திருத்தியமைத்து புதிய சட்டமொன்றை முன் வைப்போம் - என்றார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
10.06.2024 திங்கட்கிழமை
குரோதி வருடம், வைகாசி 28

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சர்வதேசத்தை புரிந்துகொள்ளுங்கள்

இலங்கை, ஐக்கிய நாடுகள் சபையின் பொது சபையால் - ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக பேரவையின் நிறைவேற்று குழுவுக்கு தெரிவாகியுள்ளது. இதனடிப்படையில், 2025ஆம் ஆண்டிலிருந்து மூன்று வருட காலத்துக்கு இந்தப் பொறுப்பில் இருக்கும். 189 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொண்டன. இதன்போது, 182 வாக்குகளை பெற்று இலங்கை தெரிவாகியிருக்கின்றது.

வாக்களிப்பின்படி, ஆசிய பிராந்தியத்தில் இரண்டாவது இடத்தையும் உலகில் ஏழாவது இடத்தையும் இலங்கை பெற்றிருக்கின்றது. இலங்கை அரசை சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தும் இராஜதந்திர நடவடிக்கையில் புலம்பெயர் சமூகம் ஈடுபட்டு வருவதான கதைகள் கூறப்பட்டுவரும் நிலையில்தான் இலங்கை இந்தளவு ஆதரவுடன் வெற்றிபெற்றிருக்கின்றது. இலங்கைக்கு எதிராகக் கடந்த பதினைந்து வருடகாலமாக மேற்கொள்ளப்பட்ட “தமிழ் லொபி” ஒரு சிறிய அசைவைக்கூட ஏற்படுத்தவில்லை என்பதைத்தான் இந்த விடயம் அம்பலப்படுத்துகின்றது.

“ஈழநாடு” சர்வதேச அரசியலை புரிந்து கொள்வதிலுள்ள தமிழ் பலவீனங்கள் தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியிருக்கின்றது. இதேவேளை, சர்வதேச அரசியலை உணர்வின் வழியாக நோக்குவதிலுள்ள ஆபத்துகளையும் “ஈழநாடு” அவ்வப்போது சுட்டிக்காட்டியிருக்கின்றது. ஆனால், இவை எவற்றையும் அரசியல்வாதிகளும் சரி, அரசியல் விழிப்புணர்வு பெற்றவர்களாக தங்களை காண்பித்துக் கொள்வோரும் சரி - கவனத்துடன் பரிசீலிக்கவில்லை.

விடயங்களை அறிவுபூர்வமாக நோக்குவதற்கு பதிலாக போலியான நம்பிக்கைகளை பரப்பும் வகையிலேயே தங்களின் அபிப்பிராயங்களை முன்வைத்தனர். இப்போதும்கூட அவ்வாறான கதைகளையே பரப்ப முற்படுகின்றனர். தமிழ் அரசியல் பரப்பரையின் தோல்வியை கண்கூடாக நோக்கும்போதுகூட தங்களின் தோல்வியை உணர முடியாதவர்களாகவே தமிழ் அரசியல் தரப்புகள் இருக்கின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி சில பிரேரணைகள் வந்தபோதிலும்கூட அவற்றால் இலங்கை அதன் சர்வதேச முகத்தை இழக்கவில்லை. சீன சார்பு ராஜபக்ஷக்களின் கட்டுப்பாட்டின் கீழ் இலங்கைத்தீவு இருந்தபோது, இலங்கைமீதான மேற்குலகின் பார்வை சற்று காட்டமாகவே இருந்தது. மேற்குலகம் இலங்கைமீது கடுமையான அழுத்தங்களை பிரயோகிப்பதாகவே தமிழ் தரப்புகளும் எண்ணிக்கொண்டன.

ஆனால், ராஜபக்ஷக்கள் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட பின்னர் நிலைமைகள் சடுதியாக மாற்றமடைந்தன. இதன் உண்மை தன்மையை தமிழ் அரசியல் சமூகம் சரியாக புரிந்துகொள்ளவில்லை. இலங்கைமீதான அழுத்தங்கள் அடிப்படையில் தமிழ் மக்களின் நலனிலிருந்து மேற்கொள்ளப்பட்டவை அல்ல. வேண்டுமானால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையானது ஒப்பீட்டடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்கள்மீது கரிசனையுடன் இருக்கலாம். ஆனால், அதனால் இலங்கைமீது நிர்ப்பந்தங்களை ஏற்படுத்த முடியாது.

அடிப்படையில் சர்வதேச அழுத்தங்கள் என்பவை பலம் பொருந்திய நாடுகளின் நிகழ்ச்சிநிரல்களுக்கு உட்பட்டவை. இதனை புரிந்து கொண்டால் மட்டும்தான் சர்வதேசம் என்னும் சொல்லை புரிந்துகொள்ள முடியும். அவ்வாறில்லாது போனால் வெறுமனே சில சொற்களை உச்சரித்துக்கொண்டு திருப்திப்பட்டுக் கொள்வதுதான் தமிழ் மக்களுக்கான அரசியலாக எஞ்சப்போகின்றது. கனடா, ராஜபக்ஷக்கள்மீது தடை விதித்தமைக்கு தாங்களே காரணமென்று புலம்பெயர் சமூகத்தின் ஒரு பகுதியினர் கூறிக்கொண்டனர். அவ்வாறாயின், இப்போது, ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக பேரவையின் நிறைவேற்று குழுவுக்கு 182 நாடுகளின் ஆதரவுடன் இலங்கை தெரிவு செய்யப்பட்டிருப்பதை எவ்வாறு நோக்குவது?

# வெளியிடப்படாத நவாஸ் ஆணைக்குழு அறிக்கை உண்மை, நல்லிணக்க குழுவுக்கு முக்கியமாகலாம்

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

மூன்று தசாப்த காலப் போரின் விளைவாக தோன்றிய மனித உரிமைகள் பிரச்னைகளை கையாள்வதற்கு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நிறுவப்படும் என்று அண்மையில், வடக்குக்கான பயணத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார். இது தொடர்பான சட்ட மூலத்தை தயாரிக்கும் பணிகள் அநேகமாக பூர்த்தியடைந்து விட்டதாகவும் போர் குற்றங்களுக்காக வழக்கு தொடுப்பதற்கான அதிகாரத்தை உத்தேச ஆணைக்குழுவுக்கு வழங்கவேண்டுமா அல்லது விசேட நீதிமன்றம் ஒன்றை அமைத்து அந்த அதிகாரத்தை அதனிடம் கொடுக்கவேண்டுமா என்பதைத் தீர்மானிக்க வேண்டியிருக்கும் எஞ்சிய முக்கிய விடயமாகும்.

“உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நீதித்துறை அதிகாரங்களை கொண்டிருக்க வேண்டுமா அல்லது அந்த ஆணைக்குழுவின் விதப்புரைகளை அடிப்படையாகக் கொண்டு விசேட நீதிமன்றத்தை அமைக்க வேண்டுமா என்பது குறித்து நாம் ஆராய்ந்து வருகிறோம். இது தொடர்பிலான தீர்மானம் அதிமுக்கியமானது. பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தூதுவர்களின் ஆலோசனைகளை பெற்று பாராளுமன்றத்தின் பரிசீலனைக்காக சட்டமூலமொன்றை வரையுமாறு நான் சம்பந்தப்பட்ட அமைச்சர்களைக் கேட்டிருக்கிறேன்” என்று ஜனாதிபதி கூறினார்.

இது விடயத்தில் தென்னாபிரிக்க உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் உதாரணம் பின்பற்றக்கூடியதாகும். தென்னாபிரிக்காவில் அந்த ஆணைக்குழுவை அமைத்தபோது அதற்குரிய ஆணை, உறுப்பினர்கள் நியமனம் ஆகியவற்றை தீர்மானிப்பதற்கு கடைப்பிடிக்கப்பட்ட செயன்முறை ஒளிவுமறைவு இல்லாததாக இருந்தது.

அனைத்து அரசியல் கட்சிகள், சிவில் சமூகம் மற்றும் மத அமைப்புகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சுயாதீனமான தெரிவுக்குழு ஒன்றால் நாடுபூராவும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு பகிரங்க நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு உகந்த கலந்தாலோசனை செயன்முறையின் ஊடாகவே தென்னாபிரிக்காவில் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

இலங்கையில் கலந்தாலோசனை செயன்முறைகளைப் பொறுத்தவரை பல முக்கியமான முயற்சிகள் ஏற்கெனவே முன்னெடுக்கப்பட்டிருந்தன. 2011 கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினதும் 2016 கலந்தாலோசனை செயலணியினதும் ஆய்வு முடிவுகளில் அவை ஆவணப்படுத்தப்பட்டிருக்கின்றன.

முன்னைய ஆணைக்குழுக்களினதும் குழுக்களினதும் ஆய்வு முடிவுகளையும் விதப்புரைகளையும் ஆராய்வதற்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் 2021 ஜனவரியில் நீதியரசர் ஏ. எச். எம். டி. நவாஸ் தலைமையில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆய்வு முடிவுகளை இது விடயத்தில் அரசாங்கம் பரிசீலிப்பது உகந்ததாக இருக்கும். கடந்த காலத்தைக் கையாள்வது தொடர்பிலான கேள்விகளுக்கு பதில்களை அந்த ஆய்வு முடிவுகளில் கண்டுபிடிக்கக்கூடியதாக இருக்கலாம்.


2023 பெப்ரவரியில் வெளியிப்பட்ட நவாஸ் ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையின் சுருக்கத்தொகுப்பில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளடைவில் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும்போது அத்தகைய ஆணைக்குழுவின் தோற்ற அமைப்பு குறித்து விபரங்கள் விளக்கமாகத் தரப்படும் என்று அந்த சுருக்கத் தொகுப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

2024 ஜனவரியில் நவாஸ் ஆணைக்குழு அதன் இறுதி அறிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தது. யாழ்ப்பாணத்தில் உரையாற்றும்போது நவாஸ் ஆணைக்குழுவின் அறிக்கையைப் பற்றி குறிப்பிட்ட ஜனாதிபதி,” முன்னோக்கிச் செல்வதற்கு நாம் நல்லிணக்க முயற்சிகள், காணாமல் போனோர் தொடர்பிலான கரிசனைகளை கையாளுதல், இழப்பீடு வழங்குவதற்கும் உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கும் பொறிமுறைகளை வகுத்தல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். இந்த பிரச்னைகள் சகலவற்றையும் நாம் கையாளவேண்டிய நேரம் இதுவே என்று நான் நினைக்கிறேன்” என்று கூறினார்.

நவாஸ் ஆணைக்குழுவின் முழுமையான அறிக்கையை அரசாங்கம் பகிரங்கமாக வெளியிடவேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்தை இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

அவ்வாறு செய்வதன் மூலமாக அந்த ஆணைக்குழுவின் ஆய்வு முடிவுகளையும் விதப்புரைகளையும் மக்கள் அறிந்து மதிப்பீடு செய்து உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றுடன் தொடர்புடைய பிரச்னைகளை விளங்கிக் கொள்ளக்கூடியதாகவும் இலங்கையில் நிலைபேறான சமாதானத்தையும் நீதியையும் நிறுவுவதற்கு பங்களிப்பு செய்யக்கூடியதாகவும் இருக்கும்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 04 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - வைகாசி 28
நல்ல நேரம் : 07.22 - 08.52
ராகு காலம் : 11.52 - 01.22
திதி : சதுர்த்தி




**மேடம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். அதிகார பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். உடன் பிறந்தவர் பாசமழை பொழிவார்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

**இடபம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். குடும்பத்திலிருந்து வந்த கூச்சல் குழப்பம் நீங்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். யாரை நம்புவது என்கிற மனக்குழப்பத்திற்கு ஆளாவீர்கள்.

**கடகம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். அரசு காரியங்கள் தாமதமாக முடியும். வாகனம் தொந்தரவு தரும். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம்.

**சிம்மம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனு பவம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள்.

**கன்னி**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர் நண்பர்களால் ஆதாயமுண்டு. வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். மதிப்பு உயரும் நாள்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். தடைபட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். பணவரவு திருப்தி தரும். உறவினர்கள் மதிப்பார்கள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். வியாபாரத்தில் ஒப்பந்தங்கள் தள்ளிப்போகும். எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய நாள்.

**தனுசு**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக செயல்படுவார்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மகரம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர், நண்பர்களின் வருகையால் வீடு களைகட்டும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில்சாதகமான தீர்ப்பு வரும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கும்பம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். கனவு நனவாகும் நாள்.

**மீனம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். மனைவி வழியில் ஆதரவு பெருகும். உழைப்பால் உயரும் நாள்.

# பலவீனமான பா. ஜ. க. அரசை செயல்பட வைக்க வேண்டும்

## தி. மு. க. எம். பிக்களுக்கு ஸ்டாலின் அறிவுரை

சென்னை,ஜூன் 10

"தமிழ்நாட்டு மக்களுக்கு உண்மையாக இருங்கள். தமிழ்நாட்டுக்கான கோரிக்கைகளை பாராளுமன்றத்தில் எடுத்து வைத்து வாதாட வேண்டும், போராட வேண்டும். ஏராளமான வாக்குறுதிகளை நாம் மக்கள் மன்றத்தில் வைத்தோம். அவை அனைத்தையும் பாராளுமன்றத்தில் எடுத்து வைத்து அதனைச் செயல்பட வைக்க வேண்டும். பலவீனமான பா. ஜ. க. அரசை நம்முடைய முழக்கங்களின் மூலமாக செயல்பட வைக்க வேண்டிய கடமை உங்கள் அனைவருக்கும் இருக்கிறது" என தி. மு. க. பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



சென்னையிலுள்ள அண்ணா அறிவாலயத்தில் தி. மு. க. தலைவர் ஸ்டாலின் தலைமையில் அந்தக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் ஸ்டாலின் உரையாற்றினார்.

நாற்பதுக்கு நாற்பது என்று சொல்லி பரப்புரைப் பயணத்தை நான் தொடங்கினேன். நாற்பதுக்கு நாற்பது என்ற வெற்றியை அடைந்து விட்டோம். நாற்பதுக்கு நாற்பது என்ற இந்த வெற்றி என்பது சாதாரணமான வெற்றி அல்ல. 2004ஆம் ஆண்டு - இருபது ஆண்டுகளுக்கு முன்னால் கருணாநிதி நமக்குப் பெற்றுத் தந்த வெற்றி இது. அந்த வெற்றியை நாம் பெற்றுள்ளோம்.

இப்போது நாம் அடைந்துள்ள வெற்றிக்கு மிக முக்கியமான சிறப்பு உண்டு. 2019 பாராளுமன்றத் தேர்தலில் புதுவை உள்ளிட்ட தமிழ்நாட்டில் 39 தொகுதிகளைத்தான் கைப்பற்ற முடிந்தது. ஒரு தொகுதியில் வெற்றி வாய்ப்பை இழந்தோம். இந்தத் தேர்தலில் அந்த ஒன்றையும் சேர்த்து நாற்பதுக்கு நாற்பது வென்று விட்டோம். இரண்டாவது தேர்தலில், முழுமையான வெற்றியைப் பெறுவது என்பது சாதாரணமான சாதனை அல்ல, வரலாற்றுச் சிறப்பு மிக்க சாதனையாகும்.- என்றார். (எ)

# பா. ஜ. கவுடன் இனியும் கூட்டணி இல்லை

## அ. தி. மு. க. பொதுச் செயலர் உறுதி

சேலம், ஜூன் 10

"பா. ஜ. கவுடன் இனி கூட்டணி இல்லை. அ. தி. மு. க. மீண்டும் வலிமை பெறும்" இவ்வாறு அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் தமிழக முதலமைச்சருமான எடப்பாடி கே. பழனிச்சாமி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

சேலத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் தெரிவித்தவை வருமாறு,

"2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் அ. தி. மு. க. பெற்ற வாக்குகளை விட, 2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலின் போது ஒரு சதவீத வாக்குகளை கூடுதலாகப் பெற்றிருக்கிறது. இது அ. தி. மு. கவுக்கு கிடைத்த வெற்றியாகும்.

ஒவ்வொரு தேர்தலிலும் சூழலுக்கு ஏற்றவாறு வெற்றி தோல்வி அமையும். ஒரு கட்சி தோல்வி அடைந்தால் மீண்டும் தோல்வி அடையும் என்பது இல்லை.

ஒவ்வொரு முறையும் மக்களவைத் தேர்தல் என்றாலும், சட்டப்பேரவை பொதுத் தேர்தல் என்றாலும் வாக்கு வித்தியாசம் மாறி மாறி தான் வரும் . மக்கள் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தான் அரசியல் கட்சிகளுக்கு வாக்களிக்கிறார்கள்.

பா. ஜ. க. வளர்ந்து விட்டதாக செய்திகள் வெளியாகின்றன. தேர்தலில் பா. ஜ. க. கூட்டணி அதிக வாக்குகள் பெற்றதாகவும் தவறான செய்திகள் தான் அதிகம் வருகின்றன. புள்ளி விவர கணக்குப்படி 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலை விட 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் தி. மு. கவின் வாக்கு சதவீதம் குறைந்திருக்கிறது.- என்றார். (எ)

# இறுமாப்பில் இருந்த பா. ஜ. க. இனி எதுவும் செய்ய முடியாது

## தமிழச்சி தங்கபாண்டியன் விளக்கம்



சென்னை, ஜூன் 10

தங்களை எதுவும் செய்துவிட முடியாது என்ற இறுமாப்பில் இருந்த பா. ஜ. க. இப்பொழுது பிற மாநிலக் கட்சிகளை அரவணைத்துச் செல்ல வேண்டிய சூழலுக்கு வந்திருக்கிறது என்று தி. மு. க. கூட்டணி 40 இடங்களில் வென்றதால் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் விளக்கமளித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தனது எக்ஸ் வலைத்தளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "தி. மு. க. கூட்டணி 40 இடங்களில் வென்றும் பயனில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தை பிரதமர் மோடி தலைக்கு மேல் தூக்கி வணங்கியிருக்கிறார்.

ஜனநாயகம் என்பது அதிகாரம் செலுத்துவதில்லை, அடங்கி அரவணைத்துச் செல்வது என்பதை பத்தாண்டுகளுக்குப் பிறகு பா. ஜ. க. உணரத் தொடங்கியிருக்கும். தாங்கள் எதைச் செய்தாலும் கேட்பதற்கு ஆள் இல்லை என்ற நிலையிலிருந்து இறங்கி வந்திருக்கும்.

இனி பா. ஜ. க. அசைக்கவே முடியாத சக்தி என்று ஊடகங்களால் கட்டமைக்கப்பட்டு மக்களை நம்ப வைக்க நடந்த முயற்சிகள் உடைத்து நொறுக்கப்பட்டிருக்கின்றன என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)



# ஓ. பி. எஸ்ஸுக்கு ஆதரவாக பா. ஜ. க. பதாகை

புதுக்கோட்டை, ஜூன் 10

பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்த ஓ. பி. எஸ்ஸுக்கு ஆதரவாக பா. ஜ. கவினர் பதாகை வைத்துள்ளனர்.

இராமநாதபுரம் மக்களவைத் தொகுதியில் தி. மு. க. கூட்டணியில் போட்டியிட்ட இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி வேட்பாளர் நவாஷ் கனி வெற்றி பெற்றார்.

இவரை எதிர்த்து தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம், புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி சட்டப்பேரவை தொகுதியில் 41,026 வாக்குகள் பெற்றார்.

இந்த நிலையில், அறந்தாங்கி தொகுதியில் ஓ. பன்னீர்செல்வத்துக்கு வாக்களித்தோருக்கு நன்றி தெரிவித்து, பா. ஜ. க. சிறுபான்மையினர் அணி மாவட்டப் பொதுச் செயலாளர் சி. அந்தோணிசாமி, மாவட்டத் துணைத் தலைவர் ஜெ.ஜகுபர் அலி ஆகியோர், அறந்தாங்கி அண்ணா சிலை அருகில் பிளக்ஸ் பதாகை வைத்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் ஜூலையில் டெங்கு நோய் விழிப்புணர்வு!

யாழ்ப்பாணம், ஜூன் 10
யாழ். மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஜூலை மாதம் டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.


யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடந்த கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டபதில் அரச அதிபர் ம. பிரதீபன் கூறுகையில்,

தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தை கவனத்தில் கொண்டு இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. புள்ளி விவரங்களின் அடிப்படையில் 2024 ஜனவரி மாதம் முதல் வெள்ளிக்கிழமை வரை4 ஆயிரத்து 729 பேர் யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு மரணமும் பதிவாகியுள்ளது. முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும் போது இந்த அரையாண்டில் டெங்கு நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

மக்களிடத்தே விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் மட்டுமல்லாது வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்களுடனும் கலந்துரையாடி மாணவர்களுக்கும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அனைத் துத் துறைசார் அதிகாரிகளும் ஒன்றி ணைந்து செயல்படுவதன் மூலம் எதிர்காலத்தில் டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தமுடியும் என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கிணறுகளில் காணப்படும் குடம்பிகளை கட்டுப்படுத்த குடம்பிகளை உண்ணும் மீன்களை கிணற்றுக்குள் விடுவித்தல், வீட்டுக் கழிவுகளை வீதிகளில் கொட்டுவதைக் கட்டுப்படுத்துதல், கழிவுகளை தரம் பிரித்து கழிவுத் தொட்டிகளில் போடுவதை ஊக்குவித்தல் போன்ற விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. பள்ளி மாணவர்கள் மட்டத்திலும் விழிப்புணர்வு நடவடிக்கைகள், பொது இடங்களில் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிக்கும் திட்டத்தை செயல்படுத்துதல். ஆகியவை தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டன. (ஐ)




பிரசித்திபெற்ற இணுவில் பரராஜசேகர பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றவேளை...!

# 0.04 வீதமான நிலங்களே இராணுவத்துக்கு தேவை

## யாழ். மாவட்ட படைகளின் தளபதி

யாழ்ப்பாணம், ஜூன் 10
**யாழ்ப்பாணத்தில் 0.04 வீதமான நிலங்களே இராணுவத்துக்கு தேவை என்று யாழ். மாவட்ட படைகளின் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

பலாலி சந்தியில் மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் நோக்கில் இராணுவத்தினரால் பல நோக்குக் கட்டடமொன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காணி விடுவிப்புத் தொடர்பாக மாவட்ட செயலரும், அரசும் கலந்துரையாடித் தீர்மானங்களை மேற்கொண்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். (ஐ)

# போலி நாணயத்தாள்களை அச்சிடும் இயந்திரத்தை விற்க முயன்றவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 10
போலி நாணயத் தாள் அச்சிடும் இயந்திரத்தை விற்பனை செய்ய முயன்றவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பில் இருந்து குடும்பத்துடன் யாழ்ப்பாணம் வந்திருந்தபோதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் கைதான சம்பவத்தை அறிந்த அவரின் குடும்பத்தினர் தலைமறைவாகியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு குடும்பத்தினருடன் வருகை தந்த நபர் ஒருவர் அரியாலை பகுதியில், நாள் வாடகைக்கு வீடொன்றை பெற்று தங்கியுள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் குறித்த நபர் திருநெல்வேலி சந்தைக்கு அண்மித்த பகுதியில் போலி நாணய தாள்களை அச்சிடும் இயந்திரம் மற்றும் நாணயத்தாள்களை அச்சிடுவதற்கு பயன்படும் தாள்கள் என்பவற்றை நபர் ஒருவருக்கு விற்பனை செய்யும் நோக்கில் காத்திருந்தார்.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப்பெற்றதை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் நபரை கைது செய்ததுடன் அவரிடம் இருந்த பொருட்களையும் மீட்டனர்.

கைது செய்யப்பட்ட நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்தவேளை, அவர் குடும்பத்துடன் அரியாலையில் தங்கியிருப்பது தெரிய வந்து, குறித்த வீட்டுக்கு பொலிஸ் குழு விரைந்த போது, வீட்டில் இருந்தவர்கள் அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# வெளிநாட்டில் வசிப்பவரின் வீட்டில் ஆயுதங்களை வைத்திருந்தவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 10
கூரிய ஆயுதங்களுடன் இளைஞர் ஒருவரை பொலிஸர் கைது செய்துள்ளனர். கைதானவர் வெளிநாட்டில் வசிக்கும் ஒருவரின் வீட்டில் ஆயுதங்களை மறைத்து வைத்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் ஈவினையில் வைத்தே அந்த இளைஞரை பொலிஸார் கைது செய்தனர். இதன்போது, சந்தேகநபரிடம் வாள்கள், கைக்கோடரிகள் உள்ளிட்ட 8 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

கைதான சந்தேக நபருக்கு பல வன்முறை சம்பவங்களுடன் தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. அத்துடன், இந்த ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்ட வெளிநாட்டில் வதியும் நபருக்கும் இந்த சம்பவங்களுடன் தொடர்பு இருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (ஐ)

# இந்திய துணை தூதரகத்தால் யாழ்ப்பாணத்தில் யோகா தினம்!



யாழ்ப்பாணம், ஜூன் 10
சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகம் கடந்த ஜூன் 6 ஆம் தேதி இரண்டு யோகா செயல் விளக்க நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தது.

முதல்நிகழ்வு யாழ்ப்பாணம் தலைமைச் செயலக பணிமனையில் காலை 7:00 மணி முதல் 8:00 மணி வரையிலும், இரண்டாவது நிகழ்வு தலைமை செயலக கேட்போர் கூடத்தில் காலை 9:00 மணி முதல் 11:00 மணி வரையிலும் நடைபெற்றன.

இந்த நிகழ்வுகளில் துணைத் தூதுவர் சாய் முரளி, ராம் மகேஷ் வடக்கு மாகாண பிரதம செயலர் எல். இளங்கோவன், உதவி பிரதம செயலர் திருமதி அன்னெட் நிந்துஷா, மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் சுஜீவா சிவதாஸ், மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பி.வாகீசன் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர். (ஐ)

# இரு உணவகங்களுக்கு ரூ. 98 ஆயிரம் அபராதம்!

யாழ்ப்பாணம், ஜூன் 10
சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய இரு உணவகங்களுக்கு 98 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஏழாலை மற்றும் சுன்னாகத்தில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய உணவகங்களுக்கு எதிராகவே இந்த சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காலாவதி திகதி முடிவடைந்த மற்றும் உடல்நலனுக்கு ஒவ்வாத நிலைமையை பேணிய குற்றத்துக்காக அந்த உணவகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை நடந்த வழக்கில், உணவகங்களின் உரிமையாளர்களை கடுமையாக எச்சரித்த நீதிவான் ஏழாலை உணவக உரிமையாளருக்கு 15 ஆயிரம் ரூபாயும், சுன்னாகம் உணவக உரிமையாளருக்கு 83 ஆயிரம் ரூபாயும் அபராதமாக விதித்தார். (ஐ)

# நயினாதீவுக்கு மின் பிறப்பாக்கி!

யாழ்ப்பாணம், ஜூன் 10
நயினாதீவில் 24 மணி நேர மின்சாரம் வழங்குவதற்கு வசதியாக புதிய மின்பிறப்பாக்கி கொண்டு செல்லப்பட்டுள்ளது.

நயினாதீவில் மக்களின் பயன்பாட்டுக்கு மின்சாரத்தை வழங்கும் மின் பிறப்பாக்கி ஒரு வார காலமாக பழுதடைந்திருந்தது. இதனால், ஒருநாளில் சுமார் 4 மணி நேரத்துக்கு மேலாக மின்சாரம் தடைப்பட்டு வந்தது.

இதனால், நயினாதீவு மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தனர்.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. இந்த நிலையில், நேற்று முன்தினம் நயினாதீவுக்கு புதிய மின்பிறப்பாக்கி இலங்கை மின்சார சபையினால் கொண்டு செல்லப்பட்டது. (ஐ)

# கசிப்புடன் மானிப்பாயில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 10
750 மில்லி லீற்றர் கசிப்புடன் ஒருவரை மானிப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதானவர் ஆனைக்கோட்டையை சேர்ந்த 37 வயது நபராவார்.

கைதான நபருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணம் வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளி அம்பாள் ஆலய நூதன திரிதள இராஜகோபுர பஞ்சகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் நேற்று காலை பக்தி பூர்வமாக நடைபெற்றது.
(படங்கள் : ஐ.சிவசாந்தன்)

# சுதந்திர கட்சியை கையகப்படுத்த மைத்திரிக்கு இடமளிக்க வேண்டும்

## துமிந்த திஸநாயக்கா தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

சிறீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்புரிமை கூட இல்லாத அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை தலைவராக்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்தார். ஆனால், நீதித்துறை அதனை தடுத்துள்ளது. இன்று மாத்திரமல்ல, இனி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சுதந்திர கட்சியை கையகப்படுத்த அந்தத் தரப்பினருக்கு நாம் இடமளிக்கமாட்டோம் என பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸநாயக்க தெரிவித்தார்.

புதிய கூட்டணியின் சார்பில் சிறீலங்கா சுதந்திர கட்சி ஏற்பாடு செய்திருந்த மக்கள் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இந்த கூட்டத்தில் கலந்துகொண்டுள்ள சகல பாராளுமன்ற உறுப்பினர்களதும் தாய் வீடு சிறீ லங்கா சுதந்திர கட்சியாகும். கடந்த காலங்களில் அவர்கள் பல திசைகளில் பிளவடைந்திருந்தாலும், தற்போது நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான புதிய பயணத்தில் எம்முடன் கைகோர்த்துள்ளனர்.

கடந்த காலங்களில் இழைக்கப்பட்ட தவறுகளால் எமது நாடு வங்குரோத்தடைந்தது. அவற்றுக்கு சில சந்தர்ப்பங்களில் நாமும் பொறுப்புக்கூற வேண்டியவராக உள்ளோம். எனவே தான் இழைத்த தவறை சரி செய்வதற்காக இந்த புதிய பயணத்தை தொடங்கியுள்ளோம். சுதந்திர கட்சியில் தலைமையிலான கூட்டணியில் நாட்டை கட்டி யெழுப்புவோம்.

நாட்டின் அடுத்த ஜனாதிபதியை தெரிவு செய்யக்கூடிய பலம் எம்மிடமே உள்ளது. சுதந்திர கட்சியின் ஆதரவின்றி எவராலும் வெற்றி பெறமுடியாது. கட்சியின் உறுப்புரிமை கூட இல்லாத அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை தலைவராக நியமிக்க முன்னாள் ஜனாதிபதி தீர்மானித்தார். எனினும், சட்டம் அதற்கு இடமளிக்கவில்லை. இன்றல்ல, இனி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மைத்திரி தரப்பு சுதந்திர கட்சியை கையகப்படுத்த நாம் இடமளிக்க மாட்டோம் - என்றார்.

(ஐ)

# 'இந்து சகோதரர்களின் போர்' வரும் 14ஆம் திகதி ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூன் 10

சாவகச்சேரி இந்து கல்லூரி - மானிப்பாய் இந்து கல்லூரிகளுக்கு இடையிலான பெருந் துடுப்பாட்ட போட்டி எதிர்வரும் ஜூன் 14, 15ஆம் திகதிகளில் ஆரம்பமாகவுள்ளது.

இந்து சகோதரர்களின் போர் என்று பெயரிடப்பட்டுள்ள இந்தத் துடுப்பாட்டப் போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியின் பின்னர் எதிர்வரும் 16ஆம் திகதி இரு பாடசாலைகளின் பழைய மாணவர்களுக்கும் இடையிலான இருபது - 20 போட்டி நடைபெறவுள்ளது.

நூற்றாண்டு கடந்த வரலாற்றை கொண்ட இரு பாடசாலைகளின் இந்த துடுப்பாட்டப் போட்டிக்கு பலரும் ஆதரவு தெரிவித்து வருவதுடன், பாராட்டுகளையும் தெரிவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# சமத்துவ கட்சியின் இளைஞர் அணியினரால் குருதி கொடை



கிளிநொச்சி, ஜூன் 10

சமத்துவக் கட்சியின் இளைஞர் அணியின் ஏற்பாட்டில் உதிரத்தால் ஒன்றிணைவோம் இரத்ததான நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி சமத்துவ கட்சியின் பணிமனையில் நடைபெற்றது.

இதில், இளைஞர்கள் சுமார் 20இற்கும் மேற்பட்டவர்கள் பங்குகொண்டு குருதி கொடை வழங்கியிருந்தனர். "நண்பா குருதியை கொடு ஒருவரின் இறுதியை தடு", என்ற தொனிப் பொருளில் வருடந்தோறும் இந்தக் குருதிக் கொடை நடத்தப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் இரத்த வங்கியை சேர்ந்த மருத்துவர்கள், உத்தியோகத்தர்கள் குருதிக் கொடையாளர்களிடமிருந்து குருதியை சேகரித்தனர். (ஐ)

# இந்திய மீனவர்கள் எமது கடலுக்குள் அத்துமீறாதிருக்க நடவடிக்கை தேவை!

## யாழ். மாவட்ட மீனவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 10

எதிர்வரும் 15ஆம் திகதி இந்தியாவில் மீன்பிடி தடைக் காலம் முடிவடையவுள்ள நிலையில் இந்திய கடற்றொழிலாளர்கள் இலங்கைக்கு அத்துமீறி வராமல் இருக்க இரு நாட்டு அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட கடற்றொழில் கிராமிய அமைப்புகளின் தலைவர் செல்லத்துரை நற்குணம் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த இரண்டு மாதங்களாக வடபகுதி கடற்றொழிலாளர்கள் மிகவும் சந்தோசமாக தொழில் மேற்கொள்ள கூடியதாக இருந்தது. எதிர்வரும் 15 ஆம் திகதி இந்தியாவில் மீன்பிடி தடைக் காலம் முடிவடையுள்ள நிலையில் இந்திய கடற்றொழிலாளர்கள் இலங்கைக்கு அத்துமீறி வராமல் இருக்க இரு நாட்டு அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்திய பிரதமராக மோடி தெரிவானமைக்கு கடற்றொழிலாளர்கள் மகிழ்ச்சியை தெரிவித்துள்ளனர். இந்திய பிரதமர் இந்திய கடற்றொழிலாளர்களின் இழுவைமடி படகுகளை தடை செய்ய வேண்டும்.

எதிர்வரும் 15ஆம் திகதி மீன்பிடி தடைக் காலம் முடிந்து இந்திய இழுவை மடி படகுகள் எமது எல்லைக்குள் வராது தடுக்க இலங்கை அரசு கடற்படை நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கம், கடற்றொழில் அமைச்சு, கடற்படை இதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் - என்றார்.

(ஐ)

# வீதியை மறித்து மக்கள் போராட்டம்!

கொழும்பு, ஜூன் 10

பிலியந்தலை - மஹரகம பிரதான வீதியை வெள்ளத்தால் பாதிக்கப்படாத வகையில் அபிவிருத்தி செய்யுமாறு கோரி அரவலவெல சந்தியை கடந்து போக்குவரத்தை மறித்து நேற்று அந்தப் பகுதி மக்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சிறிய மழை பெய்தாலும், பிரியந்தலை மற்றும் மஹரகம மாநகர சபைகளின் எல்லைகள் பிரியும் இடத்தில் வீதி முற்றாக நீரில் மூழ்கி போக்குவரத்து தடைப்படுவதாக பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டினர்.

இது தொடர்பில் அதிகாரிகளுக்கு பல தடவைகள் தெரிவித்தும் தீர்வு கிடைக்காததாலேயே வீதியை மறித்துப் போராடுவதாக போராட்டத்தில் பங்கேற்ற மக்கள் தெரிவித்தனர்.

# பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்க அலி சப்ரி ரஷ்யாவுக்கு பயணம்

கொழும்பு, ஜூன் 10

ரஷ்யாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவின் அழைப்பின் பேரில், இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ரஷ்யாவுக்கு செல்லவுள்ளார்.

அமைச்சர் அலி சப்ரி இன்று ரஷ்யா பயணமாகிறார். அந்நாட்டின் நிஸ்னி நோவ்கோரோடில் நாளை ஆரம்பமாகவிருக்கும் பிரிக்ஸ் அமைச்சர்கள் அமர்வில் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்து சமுத்திர கரையோர நாடுகள் அமைப்பின் அமைச்சர்கள் குழுவின் தற்போதைய தலைவர் என்ற வகையிலும் இலங்கையுடன் நீண்டகால இரு தரப்பு உறவுகளை கொண்ட நாடாக ரஷ்யா விளங்குவதாலும் அமைச்சர் அலி சப்ரிக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் நடைபெறும் பிரிக்ஸ் அமைச்சர்கள் கூட்டமானது 'நியாயமான உலகளாவிய வளர்ச்சி மற்றும் பாதுகாப்புக்கான பன்முகத்தன்மையை வலுப்படுத்துதல்' என்ற கருப்பொருளின் கீழ் நடைபெறுகிறது.

இதேநேரம் இந்த விஜயத்தின்போது 'குளோபல் சவுத்' நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பொன்றிலும் பங்கேற்கவுள்ளதோடு இந்த சந்திப்பின்போது அமைச்சர் அலி சப்ரி 'உலகளாவிய நிர்வாகத்தை சீர்திருத்துவதில் நிலையான வளர்ச்சியை உறுதி செய்து உலகளாவிய பாதுகாப்பை மேம்படுத்துவதில் பிரிக்ஸ் மற்றும் குளோபல் சவுத்தின் பங்கு' என்ற தலைப்பில் அறிக்கையொன்றையும் கையளிக்கவுள்ளார்.

இதேநேரம், பிரிக்ஸ் அமைச்சர்கள் அமர்வுக்கு சமாந்தரமாக நடைபெறும் பக்க நிகழ்வுகளில் அவர் பங்கேற்கவுள்ளதோடு, அமர்வை நடத்தும் ரஷ்யாவின் ஆளும் தரப்பினருடன் இரு தரப்பு பேச்சுகளிலும் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறீ லங்கா சுதந்திர கட்சி இணைந்த புதிய கூட்டணியிடமே அடுத்த ஆட்சி!

## அமைச்சர் சுசில் பிரமேஜயந்த

கொழும்பு, ஜூன் 10

**“புதிய கூட்டணி, சிறீலங்கா சுதந்திர கட்சி இணைந்த இந்த பரந்துபட்ட அரசியல் கூட்டணி தேர்தலின் பின்னர் நிச்சயம் ஆட்சி அமைக்கும்.”, என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.**



சிறீ லங்கா சுதந்திர கட்சி ஏற்பாடு செய்த புதிய கூட்டணியின் மக்கள் கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை அம்பாந்தோட்டையில் நடந்தது. இதில் பங்கேற்று பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியவை வருமாறு,

இன்று (நேற்றுமுன்தினம்) இந்த கூட்டத்தில் 19 பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டிருக்கின்றனர். ஜனாதிபதி வேட்பாளராகும் கனவிலும் ஜனாதிபதியாகும் கனவிலும் உலாவிக் கொண்டிருக்கும் எதிர்க்கட்சியில் சிலரின் எந்தவொரு கூட்டத்தில் இந்தளவு பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை.

வெளி மாவட்டங்களிலிருந்து ஒரு பேருந்தைக்கூட வரவழைக்காது அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து மாத்திரம் ஆயிரக்கணக்கான மக்களை பங்கேற்க செய்துள்ளமை எமக்குக் கிடைத்த முதல் வெற்றியாகும். புதிய கூட்டணி, சிறீ லங்கா சுதந்திர கட்சி இணைந்த இந்த பரந்துபட்ட அரசியல் கூட்டணி தேர்தலின் பின்னர் நிச்சயம் ஆட்சி அமைக்கும்.

அடுத்த ஜனாதிபதியையும் ஆட்சியையும் தெரிவு செய்யக்கூடிய பலம் எமது கூட்டணிக்கு உள்ளது. எனவே ஏனையவர்கள் கனவு காணலாம். ஆனால், அந்த கனவு ஒருபோதும் நனவாகாது. இனிவரும் நாட்களில் அடுத்தடுத்த மாவட்டங்களில் நாம் ஏற்பாடு செய்யும் கூட்டங்களில் பங்கேற்கும் எம்.பி.க்களினதும், மக்களினதும் எண்ணிக்கை பன்மடங்காக அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை - என்றார். (ஐ)

# ஒழுக்காற்று விசாரணையை எதிர்கொள்வதற்கு நான் தயார்

## அமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

“எந்த அரசியல் கட்சியும் என்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தாலும் அதனை எதிர்கொள்ள நான் தயார்”, இப்படி நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூறியுள்ளார்.

விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் கூறியிருந்தார்.

சிறீலங்கா சுதந்திர கட்சியின் பதில் தலைவராக அவர் நியமிக்கப்பட்டமைக்கு எதிராக பெரமுனவின் ஒழுக்காற்று சபைக்கு அறிக்கை கிடைத்துள்ளதாகவும் சாகர தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 100 டெங்கு நோயாளர்கள் தினசரி பதிவாகின்றனர்

கொழும்பு, ஜூன் 10

நாட்டில் தற்போது தினசரி சுமார் 100 டெங்கு நோயாளர்கள் பதிவாகின்றனர் என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 25 ஆயிரத்த 619 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் அதிகமானவர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர்.

இதற்கமைய மேல் மாகாணத்தில் மாத்திரம் 9 ஆயிரத்து 348 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேல் மாகாணம் மாத்திரமின்றி வடமேல், தென், சபரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் டெங்கு நோய் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சிசு செரிய சேவையில் புதிதாக 500 பேருந்துகள்

கொழும்பு, ஜூன் 10

மாணவர்களுக்கான பேருந்து ( சிசு செரிய) சேவையில் புதிதாக 500 பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துமாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு பணித்துள்ளார்.

2005ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் பாடசாலை, தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான அரசாங்கத்தின் மானியத்துடன் கூடிய சிசு செரிய பஸ் சேவை நடத்தப்படுகின்றது.

இலங்கை போக்குவரத்து சபையின் 811 பஸ்கள் மற்றும் 726 தனியார் பஸ்கள் உட்பட 1,537 பஸ்கள் சிசுசெரிய சேவைக்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அரசாங்கம் இதற்காக மானியமாக 200 கோடி ரூபாயை வழங்கியுள்ளது.

போக்குவரத்து கட்டணங்கள் அதிகரிக்கப்பட்ட பின்னர் நாட்டின் அனைத்து பகுதிகளிலிருந்தும் பாடசாலை பேருந்துகள் தேவைப்படுவதனால் மாணவர்களுக்காக 500 புதிய பேருந்துகளை இயக்குவதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு அமைச்சர் அனுமதி கொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# திருவிழாவில் கைவரிசை காட்டியவரை ஒரு மணி நேரத்தில் பிடித்த பொலிஸ்!

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை - கன்னாதிட்டி காளி கோயில் கோபுர கும்பாபிஷேக நிகழ்வில் பங்கேற்ற அடியார்களின் தாலிக்கொடி, சங்கிலியை திருடியவரை ஒரு மணி நேரத்துக்குள் பொலிஸார் கைது செய்தனர்.

கன்னாதிட்டி காளி கோயில் கும்பாபிஷேகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. பெருந்திரளான பக்தர்கள் இதில் பங்கேற்றனர். இதனை சாதகமாகப் பயன்படுத்தி திருட்டில் ஈடுபட்ட பெண் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் நிஷாந்த தலைமையிலான பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலை அடிப்படையாகக் கொண்டு, காளி கோயிலில் இந்து இளைஞர்களின் ஒத்துழைப்புடன் திருட்டில் ஈடுபட்ட பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து திருடப்பட்ட நகைகளும் மீட்கப்பட்டன.

கைதான பெண் 27 வயதுடையவர் என்றும் கொழும்பு - வெல்லம்பிட்டியை சேர்ந்த அவர் தற்போது வவுனியாவில் வசித்து வருகிறார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான பெண்ணை நீதிமன்றில் முற்படுத்த யாழ்ப்பாணம் பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# கண்டியில் வெள்ளம் ஏற்படும் அபாயநிலை

கண்டி, ஜூன் 10

தென்மேல் பருவ பெயர்ச்சி மழை எதிர்வரும் சில தினங்களில் வலுவடையவுள்ள நிலையில் கண்டி நகரம் பெரும் வெள்ளப் பெருக்கு அபாயத்துக்கு உட்படும் என்று பேராதனை பல்கலைக்கழகத்தின் புவியியல் விஞ்ஞான பிரிவின் ஓய்வுபெற்ற சிரேஷ்ட பேராசிரியர் அதுல சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கண்டி நகரம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள முறைசாரா மற்றும் சட்டவிரோத நிர்மாணங்களே இதற்குக் காரணம் என்றும் அவர் கூறியுள்ளார்.

மகாவலி கங்கையுடன் கூடிய உயரமான இடத்தில் அமைந்துள்ள கண்டி நகரின், மழை நீர் மற்றும் ஏனைய கழிவு நீர் வெளியேறும் இரண்டு பிரதான கால்வாய்களை அடைக்கும் வகையில் முறைசாரா மற்றும் சட்டவிரோத நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால், சிறு மழை பெய்தாலும் கண்டி நகரம் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் காணப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

கண்டி - வில்லியம் கோபல்லவா மாவத்தையிலிருந்து ஆரம்பமாகி கொட்டம்பேயில் மகாவலி ஆற்றில் இணையும் மத்திய கால்வாய் மற்றும், டி.எஸ். சேனநாயக்கா வீதியில் இருந்து ஆரம்பித்து கடுகஸ்தோட்டை அலி நாவனத் தோட்டை அண்மித்து மகாவலி ஆற்றில் இணையும் மத்திய கால்வாய் ஆகிய இரண்டு கால்வாய்களும் சில வர்த்தகர்களின் ஆக்கிரமிப்பில் உள்ளமையே இந்த அபாயத்துக்குக் காரணம்.

எனவே, இது விடயத்தில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உடன் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

# விசேட பஸ் சேவை!

கொழும்பு, ஜூன் 10

அநுராதபுரம் பொசன் திருவிழாவில் பங்குகொள்ளும் பக்தர்களின் வசதிக்காக விசேட பேருந்து சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகு ஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் கடந்த சனிக்கிழமை நடை பெற்றது.

சிறப்பு பேருந்து சேவை அட்டவணை அடுத்த வாரம் வெளியிடப்படும்.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் போயா நிகழ்ச்சி ஜூன் 21ஆம் திகதி அனுராதபுரம் அபயகிரிய மகா விகாரை வளாகத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

# இடம் மாற்றப்படுகிறது கொலன்னாவை நகரம்!

கொழும்பு, ஜூன் 10

கொலன்னாவை நகரத்தை தற்போதைய பகுதியிலிருந்து உயரமான இடத்துக்கு மாற்றுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

களனி ஆற்றின் அண்மையாக உள்ள கொலன்னாவை நகரத்தின் மருத்துவமனைகள், பாடசாலைகள், வீடுகள் மற்றும் வணிக வளாகங்கள் புதிய நகரத் திட்டத்தின் கீழ் உயரமான நிலங்களில் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

நகரத்தை இடமாற்றம் செய்வதற்கு பொருத்தமான காணிகள் அதேபகுதியில் உள்ளன. அத்துடன், புதிய நகரத் திட்டத்தின் பிரகாரம் அனுமதியற்ற நிர்மாணங்களைத் தடுக்கும் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

மேலும், இந்தத் திட்டத்தின்படி களனி ஆற்றுப் பள்ளத்தாக்கில் வெள்ளக் கட்டுப்பாட்டு அமைப்பு தயாரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நீர்நிலையில் வீழ்ந்தது பேருந்து 13 மாணவர் மருத்துவமனையில்

கொழும்பு, ஜூன் 10

மாணவர்களுடன் பயணித்த பேருந்து நீர்நிலைக்குள் பாய்ந்ததில் 13 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கேகாலை - வரகாபொலவில் இடம்பெற்ற இந்த விபத்தில், கொழும்பு - கடுவலை - மாலபே - ராஹுல பாடசாலையை சேர்ந்த மாணவர்களே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

மாணவர்கள் பயணித்த பேருந்து வேகக் கட்டுப்பாட்டை இழந்ததே விபத்துக்குக் காரணம் என்று தெரியவந்தது.

காயமடைந்த மாணவர்கள் வரகாபொல மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்துத் தொடர்பில் வரகாபொல பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமம் காட்டுப் பாதை திறப்பு; தனிச்சிங்களத்தில் நடந்தது கூட்டம்



உகந்தை, ஜூன் 10

**கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை திறப்பு தொடர்பான கூட்டம் தனிச் சிங்களத்தில் நடத்தப்பட்டதால் அதில் பங்கேற்ற தமிழர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.**

அரச அதிகாரிகள், பொது - இந்து அமைப்புகளின் பிரதிநிதிகள், மக்கள் என 90 வீதமானோர் தமிழர்களே கலந்து கொண்டனர். இருந்த போதிலும் கூட்டத்தில் விநியோகிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல், தனிச் சிங்களத்தில் அமைந்திருந்தது விசனத்தை ஏற்படுத்தியது. மேலும், கூட்டமும் தனிச் சிங்களத்தில் நடை பெற்றது. தமிழ் மொழி பெயர்ப்பு இடம் பெறவில்லை.

இதேவேளை, வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழாவுக்குச் செல்லும் பாதயாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதை எதிர்வரும் 30 ஆம் திகதி திறக்கப்படும். மீண்டும் அது ஜூலை 11 ஆம் திகதி மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை அம்பாறை உகந்தமலை முருகன் ஆலயத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம தலைமையில் இடம்பெற்ற கூட்டத்திலேயே மேற்படி இறுதி முடிவெடுக்கப்பட்டுள்ளது. (எ)



# சாய்ந்தமருது காரியப்பரில் மாணவர்களுக்கு கௌரவம்

சாய்ந்தமருது, ஜூன் 10

சாய்ந்தமருது எம். எஸ். காரியப்பர் வித்தியாலயத்தில் 2024 மாகாண மட்ட புலமைப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவ, மாணவிகள் அந்தப் பாடசாலையின் அதிபர் எம். எஸ். எம். ஆரிபினால் பரிசுப்பொருட்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில், 150 புள்ளிகளுக்கு மேல், 100இற்கு மேல் 75இற்கு மேல் என புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு கௌரவமும் மற்றும் வகுப்புகளில் மே மாதத்தில் அதிக வரவுகளைத் தந்த மாணவ, மாணவிகளைக் கௌரவித்து பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (எ)




# பாடசாலை பரிசளிப்பு விழாவில் 3 ஏ பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

சம்மாந்துறை, ஜூன் 10

சம்மாந்துறை, வீரத்திடல் அல் ஹிதாயா மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

இதன்போது, கடந்த வருடம் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை, க. பொ. த சாதாரண தர பரீட்சை, க. பொ. த. உயர்தரப் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்த மாணவர்கள் பாராட்டி கௌரவித்து விருதுகள் வழங்கப்பட்டன.

பாடசாலை அதிபர் திருமதி ஏ. எம். முனாஷிர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் நான்கு மாணவர்கள் 3 ஏ சித்திகளைப் பெற்றனர். இந்த மாணவர்களும் இவ்விழாவில் கௌரவிக்கப்பட்டனர். (எ)

# மனித பாவனைக்கு பொருத்தமற்ற குளிர்பானம் சந்தையில் விற்பனை

சாய்ந்தமருது, ஜூன் 10

மனித பாவனைக்குப் பொருத்தமற்ற பழச்சாறு மற்றும் குளிர்பானங்கள் சந்தையில் விற்பனை செய்யப்படுவதால் மக்களை அவதானமாக இருக்குமாறு சாய்ந்தமருது சுகாதார மருத்துவ அதிகாரி அர்சாத் காரியப்பர் அறிவுறுத்தியுள்ளார்.

சாய்ந்தமருது பிரதேசத்தில் உணவுகள் சார்ந்து எடுக்கப்படும் நடவடிக்கைகளில் அரசாங்க பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பப்படும் உணவு மாதிரிகளில் மனித பாவனைகளுக்கு பொருத்தமில்லாத பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனால் சிறு குழந்தைகள் சிறுநீரக நோய், புற்றுநோய் போன்றவற்றால் பாதிப்படைகின்றனர்.

அண்மையில் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்ட குளிர்பானம் மனித பாவனைக்குப் பொருத்தமற்றது. இது போன்ற குளிர்பானங்கள் திருமண மண்டபங்களில் அதிகம் பாவனையில் உள்ளது. அதிக இலாபம் பெறுவதற்காக கடைகளிலும் இவ்வகை குளிர்பானங்கள் விற்கப்படுகின்றன. இவ்வகை குளிர்பானங்கள் விற்கப்படுவது தெரிய வந்தால் உடனடியாக பறிமுதல் செய்யப்படும்- என்றார். (எ)

# காரைதீவில் மக்களுக்கு அரிசி வழங்கல்



காரைதீவு, ஜூன் 10

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இரண்டாம் கட்டமாக அரிசி வழங்கல் காரைதீவு பிரதேச செயலகத்தில் அந்த பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் தலைமையில் நடைபெற்றது.

இதில், அம்பாறை அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம கலந்துகொண்டு அரிசி வழங்கலை ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது, மாவட்ட மற்றும் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (எ)

# மட்டு. புனித மைக்கல் கல்லூரி புதிர் போட்டியில் முதலிடம்



மட்டக்களப்பு, ஜூன் 10

நாடளாவிய ரீதியில் உயர்தர விஞ்ஞானப் பிரிவு காணப்படும் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட இரசாயன புதிர்ப்போட்டியில் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரி அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்றுள்ளது.

201 பாடசாலைகள் பங்குபற்றிய இந்தப் போட்டியில் 12 பாடசாலைகள் அடுத்த சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தன. அதன் பின்னர் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் புனித மைக்கல் கல்லூரி வெற்றி பெற்றது.

கல்லூரியின் வரலாற்றிலே இரசாயன புதிர்ப்போட்டியில் இக் கல்லூரி வெற்றி பெற்றது இதுவே முதன்முறையாகும்.

அத்துடன் வெற்றி பெற்ற மாணவர்களையும் இம்மாணவர்களை பயிற்றுவித்த இரசாயனவியல் ஆசிரியர்களான திருமதி பீ. கிருபாகரன் மற்றும் திருமதி பீ. சுகுணன் ஆகியோருக்கு அதிபர் உள்ளிட்ட கல்விச் சமூகத்தினர் பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர். (எ)

# காரைதீவில் மரம் நடுகைவிழா



காரைதீவு, ஜூன் 10


தேசிய சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு காரைதீவு கமநல சேவைகள் நிலையத்தில் மர நடுகை நிகழ்வு காரைதீவு பிரதேச விவசாய போதனாசிரியை திருமதி சஜிகலா ரகுநந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விவசாய உதவிப் பணிப்பாளர் திருமதி அழகுமலர் ரவீந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

காரைதீவு பிரதேச விவசாய பெரும்பாக உத்தியோகத்தர் பாத்திமா சர்ஜானா, விவசாய போதனாசிரியர் (மத்தி) பி. பிரதீப் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹமாஸ் உட்பட 200 பேரை கொன்று குவித்த இஸ்ரேல்




ஜெருசலேம், ஜுன் 10

காஸா மீது இஸ்ரேல் நடத்திய கொடூரத் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பினர் உட்பட 200 பேர் கொன்று குவிக்கப் பட்டனர்.

அத்தோடு, ஹமாஸ் அமைப் பினரால் கடத்திச் செல்லப் பட்டு காஸா முனையிலுள்ள நுசைரத் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இஸ்ரேலிய பணயக் கைதிகளில் 4 பேரை அந்த நாட்டின் சிறப்புப்படை யினர் அதிரடியாக மீட்டனர்.

அதேவேளை, மீட்பு நடவ டிக்கையின்போது நுசைரத் முகாம் மீது இஸ்ரேல் படை யினர் கொடூரத் தாக்குதல் நடத் தினர். தரைவழி மற்றும் விமா னப்படை மூலம் இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பினர் உட்பட 200 இற் கும் மேற்பட்டோர் உயி ரிழந்தனர். மேலும், 400 இற் கும் மேற்பட்டோர் படுகாய மடைந்தனர். (எ)



## போர் நினைவிடத்தில் மோடி மரியாதை

டில்லி, ஜுன் 10

பதவியேற்பு விழாவை முன் னிட்டு தேசிய போர் வீரர்கள் நினைவிடத்தில் இந்தியப் பிரத மர் நரேந்திர மோடி மரியாதை செலுத்தினார்.

மக்களவை தேர்தலில் பா. ஜ. க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 293 இடங்களைக் கைப்பற்றி வெற்றி பெற்றது. இதனைய டுத்து இந்தியாவின் பிரதமராக 3 ஆவது முறை மோடி நேற்றுப் பதவியேற்றார். அவரது பதவி யேற்பு விழா டில்லி ஜனாதிபதி மாளிகையில் நேற்று இரவு 7.15 மணிக்கு நடைபெற்றது.

இந்த நிலையில் பதவியேற்பு விழாவை முன்னிட்டு டில்லி யிலுள்ள தேசிய போர் வீரர்கள் நினைவிடத்தில் மோடி மரியாதை செலுத்தினார்.

"தேசிய போர் வீரர்கள் நினை விடத்தில் நமது தேசத்துக்காக உயிர்த் தியாகம் செய்த வீரர்க ளுக்கு அஞ்சலி செலுத்தினேன். அவர்கள் கனவு கண்ட வலு வான மற்றும் வளமான இந்தி யாவை உருவாக்கிட அவர் களின் தியாகம் நம்மை ஊக்கு விக்கிறது." என்று மோடி தனது "எக்ஸ்" வலைத்தளத்தில் பதி விட்டுள்ளார். (எ)

## மோடியை வாழ்த்துவது முதிர்ச்சியற்ற செயல்!

### பாகிஸ்தான் புது விளக்கம்

இஸ்லாமாபாத், ஜுன் 10

புதிய அரசு பதவியேற்காத தால் இந்தியப் பிரதமருக்கு வாழ்த்து தெரிவிப்பது முதிர்ச்சி யற்றது - இவ்வாறு பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சின் செய் தித் தொடர்பாளர் மும்தாஜ் ஜாக்ராவிடா கூறினார்.

இந்தியப் பிரதமராக மீண்டும் பதவியேற்றுள்ள மோடிக்கு வாழ்த்து தெரிவிக்காதது ஏன் என்பதற்கு பாகிஸ்தான் இவ் வாறு புது விளக்கமளித்துள்ளது.

இஸ்லாமாபாத்தில் செய்தியா ளர்களைச் சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டுள் ளார்.

இந்திய மக்களுக்கு தங்களது தலைவரைத் தெரிவு செய்யும் உரிமை உள்ளது. இந்தியாவின் தேர்தல் நடைமுறைகள் குறித்து எந்தக் கருத்தும் கூற முடியாது. இந்தியா உள்ளிட்ட அனைத்து நட்பு நாடுகளுடன் நட்பையே பாகிஸ்தான் விரும்புகிறது. - என்றும் அவர் கூறினார். (எ)



## டென்மார்க் பிரதமரை தாக்கியவர் சிக்கினார்

டென்மார்க் பிரதமர் மேட் ப்ரெடெரிக்சனை தாக் கிய மர்ம நபரை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

குல்டோர்வெட் சதுக்கத் தில் நடந்து சென்றபோது மர்ம நபரால் பிரதமர் தாக் கப்பட்டார். இந்த சம்ப வத்தால் பிரதமர் மேட் ப்ரெ டெரிக்சன் அதிர்ச்சி அடைந் துள்ளார் என பிரதமர் அலு வலம் செய்தி வெளியிட்டுள் ளது.

இது தொடர்பில் டென் மார்க் பொலிஸார் தெரி விக்கையில், பிரதமரை தாக் கிய நபரை கைது செய்துள் ளோம். விசாரணை நடை பெற்று வருகிறது எனத் தெரிவித்துள்ளது. மேற் கொண்டு எந்தத் தகவலை யும் தெரிவிக்கவில்லை.

## ரஷ்யா மீது உக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலில் 27 பேர் பலி



மொஸ்கோ, ஜுன் 10

ரஷ்ய கட்டுப்பாட்டிலுள்ள கெர்சன் பிராந்தியம் மீது உக் ரைன் நடத்திய ட்ரோன் தாக்கு தலில் 27 பேர் பலியாகினர்.

உக்ரைன் - ரஷ்யா இடையி லான போர் இரண்டாண்டு களைத் தாண்டியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதில் ஐரோப்பிய நாடுகள் உக்ரை னுக்கு ஆயுதங்களையும் பொரு ளாதார உதவிகளையும் வழங்கு கின்றன. இதன் மூலம் உக்ரைன் இன்னும் போரில் தாக்குப் பிடித்து நிற்கிறது.

இந்த நிலையில் ரஷ்ய கட் டுப்பாட்டிலுள்ள கெர்சன் பிராந்தியத்தை குறிவைத்து உக்ரைன் சரமாரி ட்ரோன் தாக்குதல் நடத்தியது. அதில் 20 இற்கும் மேற்பட்ட ட்ரோன் களை ரஷ்ய வான்பாதுகாப்புப் படையினர் சுட்டு வீழ்த்தினர். எனினும் இந்தத் தாக்குதலில் 27 பேர் பலியாகினர். மேலும் 15 பேருக்கு படுகாயம் ஏற்பட்ட தாக ரஷ்ய பாதுகாப்பு அமைச் சகம் தெரிவித்துள்ளது. (எ)

## "இந்தியாவில் உற்சாகமான பணிகளை நாம் செய்வோம்"



வாஷிங்டன், ஜுன் 10

இந்தியாவில் உற்சாகமான பணிகளை நாம் செய்வோம் என்று பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பிரதமராக பதவியேற்றி ருக்கும் நரேந்திர மோடிக்கு எலான் மஸ்க் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நடைபெற்ற பாராளுமன்ற மக்களவை தேர்தலில் பா. ஜ. க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்றதையடுத்து, தொடர்ந்து 3 ஆவது முறையாக இந்தியாவின் பிரதமராக மோடி நேற்றுப் பதவியேற்றார்.

இந்த நிலையில் உலக பணக்காரர்களில் ஒருவரும், டெஸ்லா, எக்ஸ் உள்ளிட்ட நிறுவனங்களின் தலைவருமான எலான் மஸ்க் வாழ்த்து தெரிவித்துள்ளார். அதில் "உலகின் மிகப்பெரிய ஜனநாயகத் தேர்தலில் வெற்றி பெற்ற நரேந்திர மோடிக்கு வாழ்த்துகள். இந்தியாவில் எனது நிறுவனங்கள் உற்சாகமான பணிகளை செய்வதை நான் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கிறேன்" என்று பதிவிட்டுள்ளார். (எ)

# 80 சதவீதத்தை நெருங்குகிறது வேலையில்லாத் திண்டாட்டம்

### காஸா மக்கள் பரிதவிப்பு



காஸா முனை, ஜுன் 10

போர் நெருக்கடியை எதிர் கொண்டுள்ள காஸா மக்களை வேலையில்லாத் திண்டாட்டம் மேலும் வாட்டி வதைத்து வரு கிறது. அங்கு வேலையின்மை 80 சதவீதத்தை நெருங்குவதாக சர்வ தேச தொழிலாளர் அமைப்பு அதிர்ச்சித் தகவல் வெளியிட் டுள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட வெஸ்ட் பேங்க் பகுதியில் வேலையின்மை சுமார் 32 சதவீதத்தை எட்டியுள் ளது. அத்தோடு அப்பகுதி மக்கள் சம்பளப் பற்றாக்குறை பிரச்னை யையும் எதிர்கொண்டு வருகின்ற னர். இதனால், காஸா மக்கள் நிதி நெருக்கடியில் தவித்து வருகின் றனர்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் இன்னும் நீடித்து வரும் நிலையில், உலகத் தலைவர்கள் போர் நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ளனர். ஆனால், இஸ் ரேல் அதை காதில் வாங்கிக் கொள்ளாமல், கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தி வருகிறது. காஸா வில் ஐ. நா. நடத்தும் பாடசாலை மீது இஸ்ரேல் நடத்திய தாக்குத லில் சிறுவர்கள் உட்பட 40 பலஸ் தீனர்கள் கொல்லப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து, மத்திய காஸாவில் வெள்ளிக்கிழமை அதி காலை இஸ்ரேல் நடத்திய தாக்கு தல்களில் 15 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். மேலும், நேற்றுக்காலை 8 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் 77 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்ட தாகவும், 221 பேர் படுகாயம டைந்ததாகவும் தகவல் வெளி யாகியுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் இல்லாத அரச நிர்வாகத்தை எம்மாலேயே உருவாக்க முடியும்!

## நாமல் ராஜபக்ஷ எம். பி. சொல்கிறார்



கொழும்பு, ஜூன் 10

**ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் தற்போது ஆரம்பமாகியுள்ளது. திருடர்களை பிடிப்பதாகக் கூறிக்கொண்டு அரசியல் செய்யும் நிலைப்பாட்டில் பிரதான எதிர்க்கட்சிகள் செயல்படுகின்றன. ஊழல் இல்லாத அரச நிர்வாகத்தை எம்மாலேயே உருவாக்க முடியும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ.**

பெரமுனவின் மக்கள் சந்திப்பு மாத்தளை - ரத்தோட்டையில் சனிக்கிழமை நடைபெற்றது. அங்கு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக போட்டியிட்ட மகிந்த ராஜபக்ஷ தனது முதலாவது தேர்தல் பிரசார கூட்டத்தை ரத்தோட்டையில் நடத்தினார். ஆகவே, எமது அரசியல் பயணத்தில் ரத்தோட்டை இன்றியமையாதது.

69 இலட்ச மக்கள் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்தார்கள். உள்நாட்டு உற்பத்திகளுக்கு முக்கியத்துவம் வழங்கி தேசிய தொழில் துறையை மேம்படுத்திக் கொண்டிருந்த வேளை துரதிர்ஷ்டவசமாக கோவிட் பெருந்தொற்று தாக்கத்துக்கு முகங்கொடுக்க நேரிட்டது.

கோவிட் பெருந்தொற்றில் இருந்து மக்களை பாதுகாக்கும்போது பொருளாதார ரீதியில் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்பதை நன்கு அறிவோம். கோவிட் பெருந்தொற்று தாக்கத்துடன் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பை ஒரு தரப்பினர் தமது அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்தினார்கள்.

அரசியல் சூழ்ச்சியால்தான் எமது அரசாங்கம் வீழ்த் தப்பட்டது. நெருக்கடியான தீர்வு காண்பதற்கு பாராளுமன்றத்தின் ஊடாக தற்காலிக தீர்மானத்தை எடுத்தோம். சர்வதேச நாணய நிதியத்தை மாத்திரம் கொண்டு பொருளாதார ரீதியான தீர்மானங்களை எடுக்க முடியாது.

நாட்டுக்கு எதிரான எவ்வித தீர்மானங்களையும் நாங்கள் எடுக்க போவதில்லை. நாட்டை கட்டியெழுப்பும் பொறுப்பை நாங்கள் ஏற்போம். 30 வருடகால யுத்தத்தை நிறைவு செய்து நாட்டை அபிவிருத்தியடைய செய்த தலைவர் எம்மிடம் உள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் தற்போது ஆரம்பமாகியுள்ளது. திருடர்களை பிடிப்பதாக குறிப்பிட்டுக்கொண்டு அரசியல் செய்யும் நிலைப்பாட்டில் பிரதான எதிர்க்கட்சிகள் செயல்படுகின்றன. ஊழல் இல்லாத அரச நிர்வாகத்தை எம்மால் உருவாக்க முடியும் - என்றார். (ஐ)

# நுகர்வோர் அதிகார சபையில் வெற்றிடங்கள் நிரப்பப்படும்!

கொழும்பு, ஜூன் 10

நுகர்வோர் அதிகார சபையில் விசாரணை அதிகாரிகளுக்கான பதவியில் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இவற்றை நிரப்புவதற்கான நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நுகர்வோர் அதிகார சபையில் நாடு முழுவதும் 277 பேர் மாத்திரமே காணப்படுகின்றனர். இந்த தொகை போதுமானது அல்ல.

எரிபொருள் உட்பட பொருட்களின் விலை குறைவடைந்து காணப்படுவதுடன் அதன் பலன் நுகர்வோருக்குக் கிடைக்கவில்லை.

நுகர்வோர் சட்டம் 20 வருடங்களாக திருத்தப்படவில்லை. தற்போது காணப்படும் சட்டத்தை மாற்றி அமைத்து அமைச்சரவை அனுமதியை பெறுவதற்கான வரைவை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

# ரயில் இயந்திர இயக்குநர்களின் புறக்கணிப்பு நேற்றும் தொடர்ந்தது

கொழும்பு, ஜூன் 10

ரயில் இயந்திர இயக்குநர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டம் மூன்றாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

இரண்டாம் வகுப்பு பதவி உயர்வு வழங்குவதில் தாமதம், ஆட்சேர்ப்பில் தாமதம் உள்ளிட்ட பல பிரச்னைகளை அடிப்படையாக கொண்டு கடந்த 06ம் திகதி நள்ளிரவு 12.00 மணி முதல் இந்தப் பணிப்புறக்கணிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

தமது கோரிக்கைகளுக்கு அதிகாரிகள் பதிலளிக்கவில்லை என்றால் தொழிற்சங்க நடவடிக்கை விரிவாக்கப்படும் என்று லோகோமோட்டிவ் ஒப்ரேட்டிங் பொறியியலாளர்கள் சங்கத்தின் செயலாளர் எஸ். ஆர். சி. எம். சேனநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்ய எதிர்பார்த்துள்ளதாக போக்குவரத்து அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தை நெருக்கடிக்கு உள்ளாக்கும் நோக்கில் 21 பேர் இந்தத் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# போதைப்பொருள் கடத்தல் புதிய தகவல்கள் கிடைத்தன

## பொலிஸ் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

யுக்திய நடவடிக்கையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

வெளிநாடுகளிலிருந்து போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவோரின் பெயர்கள் மற்றும் இருப்பிடங்கள் தொடர்பான தகவல்களும் வெளியாகின என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தகவல்கள் அனைத்தும் நீதிமன்றில் முன்வைக்கப்படவுள்ளன. அதன் பின்னர், சந்தேக நபர்களுக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டு - அவர்களின் சொத்துகள் அனைத்தும் அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



தென்னிலங்கையில் அண்மையில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ளத்தில் நனைந்துபோன தனது புத்தகம், கொப்பிகளை கவலையுடன் காயவிடும் சிறுவன்...!

# விபத்தில் ஒருவர் படுகாயம்!

நுவரெலியா, ஜூன் 10

நடந்து சென்றவரை பேருந்து மோதிய விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

நுவரெலியா - கந்தப்பளை நகரில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் படுகாயமடைந்த 42 வயது நபர் நுவரெலியா பொது மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

விபத்து தொடர்பில் விசாரணை நடத்தி வரும் பொலிஸார் பேருந்தின் சாரதியை கைதுசெய்துள்ளனர். (ஐ)

# கசிப்புடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூன் 10

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பதுளை - மகியங்கனை - அல்ஹேனத்தலாவ வனப்பகுதியில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பிலேயே அவர் கைது செய்யப்பட்டார். கைதானவர் 35 வயது நபராவார்.

2 ஆயிரம் லீற்றர் கசிப்பு, ஒன்றரை லீற்றர் கோடாவுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை மகியங்கனை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# 2025 வரவு - செலவு திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்படாது

கொழும்பு, ஜூன் 10

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

கேகாலை மாவட்டத்தின் ருவன்வெல்ல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், வரவு - செலவு திட்டத்துக்கு பதிலாக இடைக்கால ஒதுக்கீட்டுத் திட்டம் ஒன்று முன்வைக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)



# வீடு நிர்மாணிப்பதற்கான உதவி தொகை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 10

மேல் மாகாண வீடமைப்பு அபிவிருத்தி நிதியத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறுவோருக்கு வழங்கப்படும் வீடமைப்பு உதவித் தொகையை மேல் மாகாண ஆளுநர் ரொஷான் குணதிலக அதிகரித்துள்ளார்.

இதன்படி, புதிய வீடு கட்டுவதற்காக வழங்கப்பட்ட அதிகபட்ச தொகை இரண்டு இலட்சம் ரூபாயிலிருந்து [illegible] அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அமைக்கப்பட்ட வீட்டை திருத்துவதற்கு அல்லது அரைகுறையாகவுள்ள வீட்டை நிர்மாணித்து முடிப்பதற்கான உதவித் தொகை ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த புதிய விதிகள் கடந்த முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளன என்று ஆளுநர் வர்த்தமானி அறிவித்தலையும் அவர் வெளியிட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அமைச்சரானார்...

நரேந்திர மோடியின் இரண்டாவது பதவிக் காலத்தில் வெளிவிவகார அமைச்சு பொறுப்பை ஏற்ற ஜெய்சங்கர் இலங்கை பிரச்னையில் நன்கு பரிச்சயம் உள்ளவர். அவர், இந்திய அமைதி படை காலத்திலும் இலங்கையில் பணியாற்றியவர். இவர் மீண்டும் வெளிவிவகார அமைச்சராக பதவியேற்பார் என்று தெரிய வருகின்றது.

இதேபோன்று, இந்தியாவின் மத்திய நிதி அமைச்சராக இருந்த தமிழரான நிர்மலா சீதாராமன் அமைச்சராகவும் தமிழ்நாட்டை சேர்ந்த எல். முருகன் மீண்டும் இணை அமைச்சராக பதவியேற்றுள்ளனர்.

இவர்களுக்கான துறை இன்றைய தினமே ஒதுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கையின்...

வாஷிங்டனில் இலங்கைக்கான அமெ ரிக்க தூதுவர் ஜூலி சங்கை சந்தித்த போதே அவர் இந்தக் கருத்தை வெளி யிட்டார். அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் வருடாந்த தலைமை இராஜதந்திரிகளின் அமர்வில் ஜூலி சங் பங்கேற்றிருந்தார். இதன்போது சிறப்புத் தூதுவர் பெத் வான் ஷாக்குடன் உரையாடியிருந்தார்.

இந்த சந்திப்பு குறித்து கருத்து வெளியிட்ட ஜூலி சங்,

இலங்கையில் நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான முக்கியமான அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்து வதை மையப்படுத்தி தொடர்ந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளேன். நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான முயற்சிகளைத் தொடர்வதற்கு அமெ ரிக்க தூதுவருடன் இணைந்து பணி யாற்ற எதிர்பார்த்துள்ளேன் என்று சிறப்பு தூதுவர் கூறினார் - என்றார்.

இதேசமயம், அமெரிக்க சர்வதேச வளர்ச்சி நிதிக் கழகத்தின் துணை தலைமை நிர்வாக அதிகாரி நிஷா பிஸ்வாலை ஜூலி சங் சந்தித்து பேசிய போது, கொழும்பு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தை மேம்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு 55.3 கோடி டொலர்கள நிதி உதவியை செயல்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவித்தார். (ஐ)

## மூன்றாவது...

மாலைதீவு ஜனாதிபதி முகம்மது மூயிஸ், சீசெல்ஸ் துணை ஜனாதிபதி அகமது அபிப், மொறிஷியஸ் பிரதமர் பிரவிந்த் குமார் ஜூக்னாத், நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹால் எனும் பிரசண்டா, பூட்டான் பிரதமர் ஷெரிங் தோப்கே ஆகியோர் பங்கேற்றனர்.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இந்தப் பதவியேற்பு நிகழ்வு நடைபெற்றது.

**யார் இந்த மோடி?**

நரேந்திர தாமோதராஸ் மோடி என்ற இயற்பெயர் கொண்ட இவர், 1950 செப்ரெம்பர் 17ஆம் திகதி குஜராத்தில் பிறந்தார்.

தனது 8ஆவது வயதில் ராஸ்டிர சுவயம்சேவக் சங்கம் (ஆர். எஸ். எஸ்.) அமைப்பில் சேர்ந்தார்.

1980ஆம் ஆண்டு பாரதிய ஜனதா கட்சியில் இணைந்தார்.

இதேகாலப் பகுதியில் டில்லி பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் பட்டம் பெற்றார். 1983இல் அரசறிவியல் துறையில் முதுகலை பட்டம் பெற்றார்.

2001 ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரை குஜராத் மாநிலத்தின் முதல்வராக பதவியேற்றார். 2014ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று முதன்முறையாக பிரதமரானார். தொடர்ந்து, 2019, 2024 தேர்தல்களிலும் மோடி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பொதுவேட்பாளர்...

உரிமை பொது நிலைப்பாடும் பொது வாக்கெடுப்பும்" என்ற தலைப்பில் நடத்தப்பட்ட அரசியல் கருத்துக் களத்தில் உரையாற்றியபோதே சுமந்திரன் எம். பி. இவ்வாறு கூறினார்.

அவர் தனது உரையில்,

"பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளே, அரசியல் முடிவுகளை எடுக்க வேண்டும். சிவில் சமூகக்குழுக்கள் ஏதாவது ஆலோசனை சொல்லலாமே தவிர, அரசியல் முடிவுகள் எடுப்பதற்கான மக்கள் ஆணையை பெறாதவர்கள் - என்றும் கூறினார்.

சீ. வீ. கே. சிவஞானம் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் தமிழ் அரசு தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் தேசிய கட்சியின் தலைவர் ந. சிறிகாந்தா, செயலாளர் எம். கே. சிவாஜிலிங்கம், சமத்துவ கட்சியின் தலைவர் மு. சந்திர குமார், இமானுவல் அடிகளார், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பொன். பாலசுந்தரம்பிள்ளை எனப் பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## ஒக்ரோபர்...

இதற்கு அடுத்தபடியாக சிறிய ரக கார்களும் இறுதியாக சொகுசு மற்றும் சுப்பர் சொகுசு வாகனங்களும் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும்.

மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு முன்னுரிமை அளிப்பது அரசின் கொள்கையாக இருக்கும். அத்துடன், புத்தம் புதிய வாகனங்கள் அல்லது இரண்டு ஆண்டுகளுக்குள் தயாரிக்கப்பட்ட வாகனங்கள் மட்டுமே இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும்.

மேலும், பொதுத்துறை ஊழியர்கள் வரியில்லா திட்டங்களின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிப்பது குறித்து அரசாங்கம் உடனடியாக பரிசீலிக்காது - என்றும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

இதேநேரம் பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து கடந்த 4 ஆண்டுகளாக வாகனங்கள் இறக்கும திக்கு விதிக்கப்பட்ட தடை நீடிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ.தே.க...

எவையும் - எங்கும் நடைபெறவில்லை. எதிர்காலத்திலும் அவ்விதமான பேச்சுகள் முன்னெடுக்கப்படப் போவதில்லை என்றும் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் நாளுக்கு நாள் முக்கிய அரசியல் தரப்பினர் இணைந்து வருகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தி மக்கள் செல்வாக்கின் அடிப்படையிலும் கொள்கை நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதால் எம்முடன் பலர் கைகோக்கின்றார்கள்.

எமது தரப்புக்கு பெருகிவரும் செல்வாக்கையும் ஆதரவையும் கண்டு அச்சமடைந்துள்ள தரப்பினர் பொய்யான புனைகதைகளை இப்போது வெளியிட்டு வருகின்றார்கள். அதிலொன்று தான் சிங்கப்பூர் பேச்சாகும்.

ஐக்கிய மக்கள் சக்தியிடத்தில் பல்வேறு தரப்பினரும் இணைந்து செயல்படுவது குறித்த யோசனைகளை முன்வைக்கின்றார்கள். ஆனால், நாட்டின் எதிர்காலத்தை கருத்தில்கொண்டு கொள்கை நிலைப்பாட்டிலிருந்து விலகி நிற்கும் ஊழல், மோசடி குற்றங்களுடன் தொடர்புடைய தரப்புகளுடன் நாம் பேச்சுகளுக்கு செல்வதற்கு விரும்பவில்லை.

எம்மைப் பொறுத்தவரையில் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியுடன் நாம் பேச்சுக்கு செல்லவும் இல்லை. எதிர்காலத்தில் பேசப்போவதும் இல்லை. மக்கள் தீர்க்கமான முடிவுகளை வழங்குவதற்கு தயாராகிவிட்டார்கள். கள நிலைமைகள் அதனை தெளிவாக உணர்த்துகின்றன - என்றும் கூறினார்.

# ராஜபக்ஷக்களை நான் சந்திக்கவே இல்லை!

### மறுக்கிறார் சம்பிக்க

கொழும்பு, ஜூன் 10

நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளிய ராஜபக்ஷர்களுடன் பேச்சில் ஈடுபட வேண்டிய தேவை எமக்கில்லை. பஸில் ராஜபக்ஷவுக்கும், ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றதாக வெளியான செய்தி பொய்யானது என ஐக்கிய குடியரசு முன்னணி அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதில், "இரண்டு தடவைகள் சஜித் சந்தித்தும் கதவை மூடி விட்டு புதிய பாதையை உருவாக்க இரகசிய சந்திப்பில் பாட்டலி, பஸில் என்று தலைப்பிடப்பட்டு சமூக வலைதளங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய குடியரசு முன்னணி கடந்த பெப்ரவரி 4ஆம் திகதி தேசியத்துக்காக ஒன்றிணைவோம் என்ற தொனிப் பொருளின் கீழ் நாட்டை கட்டியெழுப்பும் செயல்திட்டத்தை வெளிப்படுத்தினோம்.

இந்த மாநாட்டுக்கு ஐக்கிய மக்கள் சக்தி உட்பட பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளுக்கும் மற்றும் சிவில் அமைப்புகளுக்கும் அழைப்பு விடுத் தோம். ஆனால், பொருளாதார நெருக்கடிக்கு பொறுப் புக்கூற வேண்டிய சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு அழைப்பு விடுக்கவில்லை.

பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக்கூற வேண்டிய ராஜ பக்ஷர்கள் தலைமையிலான பொதுஜன பெரமுனவுடன் பேச்சில் ஈடுபடுவது பயனற்றது. ஆகவே பொருளாதார பாதிப்புக்கு பொறுப்புக்கூற வேண்டிய பெசில் ராஜபக்ஷவுடன் எமது கட்சியின் தலைவர் நேரடியாகவும் மறைமுகமாகவும் பேச்சில் ஈடுபடவில்லை - என்றுள்ளது. (ஐ)

## போதை மாத்திரை, வாள்களுடன் நால்வர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 10

ஆயிரத்துக்கும் மேற்பட்ட போதை மாத்திரைகள் மற்றும் வாள்களுடன் நான்கு இளைஞர்கள் நேற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதானவர்கள் நால்வரும் ஆனைக் கோட்டையை சேர்ந்த 24, 25 வயது இளைஞர்களாவர்.

யாழ். மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவு இவர்களை கைது செய்தது. கைதான நால்வரும் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஈரான் யுவதி வன்புணர்வு மசாஜ் நிலைய ஊழியர் கைது!

கொழும்பு, ஜூன் 10

ஈரான் நாட்டு யுவதி ஒருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் மசாஜ் நிலைய ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கேகாலை, ரம்புக்கனையிலுள்ள மசாஜ் நிலைய ஊழியரே கைது செய்யப்பட்டார்.

மசாஜுக்காக சென்ற யுவதியை சந்தேகநபர் அறைக்குள் அடைத்து வைத்து வன்புணர்ந்தார் என்று குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபரை கைது செய்த கேகாலை பொலிஸார் அவரை விசாரித்து வருகின்றனர். (ஐ)

## 13ஆவது திருத்த...

வித்தியாலயத்துக்கு வழங்கி வைத்தார். அத்துடன், பாடசாலை அபிவிருத்திக்காகவும் ஒரு இலட் சம் ரூபாயை வழங்கி வைத்திருந்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பல்வேறு தலைவர்கள் பல்வேறு காலகட்டங்களில் - வெவ்வேறு வழிகளில் - வெவ்வேறு பொய்களை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் என ஐக்கிய மக்கள் சக்தி எப்போதுமே கூறிவருகின்றது. சர்வதேச தொழிலாளர் தினத்தன்றும் அந்த உறுதிமொழி வழங்கப்பட்டது. அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும். நாட்டின் வடக்கு, கிழக்கு, மேல் என 9 மாகாணங்களிலும் உள்ள மக்களுக்கும் இந்த வாக்குறுதியை வழங்குகிறேன். இதனை நடைமுறைப்படுத்தத் தயங்கப் போவதில்லை.

இதன் மூலம் இந்தப் பிரதேச மக்களின் அரசியல், மத, சமூக, கலாசார உரிமைகள் வழங்கப்படும். நாட்டின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் அரசியல் மற்றும் சிவில் உரிமைகளே உள்ளடங்கியுள்ளன. ஆனால், ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இந்த அத்தியாயத்தை விரிவுபடுத்தி இதில் பொருளாதார, சமூக, மத, சுகாதார, கல்வி உரிமைகள் வழங்கப்படும்.

நாட்டில் முதல் தர, இரண்டாந் தர, மூன்றாந் தர குடிமக்கள் என்ற வகைப்பாடுகள் எவையும் இல்லை. எல்லோரும் சமமானவர்களே. சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் பறங்கியர்கள் உட்பட 220 இலட்சம் குடிமக்களும் முதல் தர குடிகளே. இதற்கான ஏற்பாடுகள் இல்லாததால், நிர்வாகத் துறையில் ... துறையில் ஏற்பாடுகளை மேற்கொண்டு யதார்த்தமாக நடைமுறைப்படுத்துவோம்.

13 ஆவது திருத்தம் குறித்து பேசும் போது பல்வேறு தலைவர்கள், மேலே பார்த்துக் கொண்டு இருத்தல் - கேட்காதது போல் நடந்து கொள்ளுதல் - பிற தலைப்புகளைக் கொண்டு வருதல் - பயப்படுதல் - வெட்கப்படுதல் போன்ற அரசியல் சந்தர்ப்பவாதிகளாக நடந்து கொள்கின்றனர். நான் நேரடியாக பேசும் நபர் என்பதால்,13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவேன்.

சிங்களவர்களாக இருந்தாலும் - தமிழர்களாக - முஸ்லிம்களாக - பறங்கியர்களாக இருந்தாலும் ஒன்றாய் கைகோத்து, ஒரு தாயின் பிள்ளைகள் போல் நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றுபடுங்கள் - என்றார். (ஐ)

## புதிய...

பெறத் தேவையான ஆவணங்களு டன் ஒட்டப்பட்ட வர்ண புகைப்படத்துடன் பழைய அடையாள அட்டையின் படங்கள் பெரிதும் வேறுபடுகின்றன.

அத்துடன், அடையாள அட்டையின் எண்கள்கூட தெரியாதளவுக்கு சிதைந்துள்ளன. இது குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தை இக்கட்டான நிலைக்கு தள்ளியுள்ளது. கடந்த இரண்டு வருடங்களில் பொலிஸ் மற்றும் விமான நிலைய அதிகாரிகளால் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு 523 போலி கடவுச்சீட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

புதிய தேசிய அடையாள அட்டை இல்லாத விண்ணப்பதாரர்களுக்கு கடவுச்சீட்டு வழங்குவதில்லை என்று தீர்மானித்துள்ளோம் - என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பல்கலைக்கழக பட்டம் பாடையில் யாழில் பட்டதாரிகள் போராட்டம்!



யாழ்ப்பாணம், ஜூன் 10

**“பட்டம் வீட்டில் பட்டதாரிகள் நடு வீதியில்“ பல்கலைக்கழக பட்டத்தை பாடையில் கட்டி, வேலையில்லாப் பட்டதாரிகள் நேற்று யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்பு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

அனைத்துப் பட்டதாரிகளுக்கும் பாரபட்சமின்றி வேலை வாய்ப்பை வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, வடக்கு மாகாண வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

“பட்டம் வீட்டில் பட்டதாரிகள் நடு வீதியில்”, “ஒரே ஒரு பரீட்சையில் பறந்து போனது பல பரீட்சை எழுதிப் பெற்ற பட்டம்”, “வேண்டும் வேண்டும் நீதி வேண்டும்”, “எமக்கான வாழ்க்கையை நாம் எப்போது வாழ்வது”, “படிப்புக்கும் போராட்டம் வேலைக்கும் போராடுவதா?”, “எல்லோருக்கும் பாரபட்சமின்றி வேலைகளை வழங்க வேண்டும்”, “படித்தவர்கள் இந்த நாட்டின் சாபக்கேடுகளா?”, “பல வருட கனவு வெறும் கனவாகவே போய்விடுமா?”, “படித்தும் பரதேசிகளாக திரிவதா?” என போராட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர்.

மேலும், தமது கோரிக்கைகளை அரசாங்கம் விரைந்து நிறைவேற்ற வேண்டும். இல்லையேல் தொடர்ந்து தாம் பெரும் போராட்டங்களை நடத்தவுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டபட்டதாரிகள் தெரிவித்தனர். (எ)

# கொக்கையின் கடத்திய உகண்டா பிரஜை கைது

கொழும்பு, ஜூன் 10

நாட்டுக்குள் கொக்கையின் போதைப்பொருளை கொண்டு வந்து கடத்த முற்பட்ட உகண்டா பிரஜை ஒருவர் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் காலை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியக அதிகாரிகளால் இவர் கைதுசெய்யப்பட்டார்.

31 வயதுடைய குறித்த நபர் கொக்கையின் போதைப் பொருளை விழுங்கிய பின்னர் கட்டாரில் இருந்து நாட்டுக்கு வந்தவர் எனவும் பொலிஸார் கூறினர்.

நீர்கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் 14 கொக்கையின் மாத்திரைகள் வெளியே எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# சட்டவிரோத சிகரெட்களுடன் இராணுவ கோப்ரல்கள் கைது

கொழும்பு, ஜூன் 10

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட சிகரெட்களுடன் இரண்டு இராணுவக் கோப்ரல்கள் கைது செய்யப்பட்டனர்.

ஹோமாகம பகுதியில் சட்டவிரோதமாக சிகரெட் விற்பனை இடம்பெறுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் பொலிஸார் விசாரணை நடத்திய போது, ஒருவர் பனாகொட இராணுவ முகாமின் கோப்ரல் எனவும் அவர் அதே தளத்தில் கடமையாற்றும் மற்றையவருக்கு சிகரெட்களை வழங்க முற்பட்டுள்ளார் என்றும் தெரியவந்தது.

இந்தச் சந்தேக நபர்களிடமிருந்து 600 சிகரெட்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன. (எ)

# இந்திய பிரதமர் மோடிக்கு கிழக்கு ஆளுநர் வாழ்த்து

கொழும்பு, ஜூன் 10

இந்தியாவின் மக்களவை தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி வெற்றி பெற்று, மூன்றாவது முறை இந்தியப் பிரதமராக பதவியேற்றுள்ள நரேந்திர மோடிக்கு கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடியின் ஆட்சியில் இந்திய மக்களுக்காக பல்வேறுபட்ட செயற்றிட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தியாவை பொருளாதார ரீதியில் வலுவான ஒரு நாடாக கட்டியமைத்துள்ளார்.

அதேபோல் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின்போது இந்திய அரசு கடன் மற்றும் பொருளாதார உதவிகளை வழங்கி இலங்கைக்கு கைகொடுத்துள்ளது. மேலும், வாழ்வாதார உதவிகளை வழங்கியுள்ளது.

இந்தியாவில் 3ஆவது முறையாக ஆட்சி அமைத்து மீண்டும் அதிகாரத்தில் அமர்ந்துள்ளார் பிரதமர் நரேந்திர மோடி. உலகத்தின் வலிமை மிக்க தலைவராகவும் அவர் மாறியுள்ளார் எனவும் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். (எ)

# 48 ரயில் சேவைகள் ரத்து

கொழும்பு, ஜூன் 10

ரயில் இயந்திர சாரதிகள் ஆரம்பித்துள்ள பணிப்புறக்கணிப்பு போராட்டம் காரணமாக நேற்று 48 ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று மூன்றாவது நாளாகவும் பணிப்புறக்கணிப்பு போராட்டம் என்று ரயில் சேவை பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இரண்டாம் வகுப்பு பதவி உயர்வு வழங்குவதில் தாமதம், ஆட்சேர்ப்பில் தாமதம் உள்ளிட்ட பல பிரச்னைகளை அடிப்படையாகக் கொண்டு கடந்த 06 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (எ)

# நல்லிணக்க ஒருங்கிணைப்புக்கு சர்வமத தலைவர்கள் நியமனம்



கொழும்பு, ஜூன் 10

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவால் சர்வமதத் தலைவர்களான சாஸ்த்ரபதி கலகம தம்மரன்சி நாயக தேரர், சிவ சிறீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா உள்ளிட்டோர் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஒருங்கிணைப்பாளர்களாக நியமனம் செய்யப்பட்டனர்.

நாட்டில் தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வை வலுப்படுத்தல். சகல இனங்களுக்கிடையில் சமாதானத்தையும் சகவாழ்வையும் கட்டியெழுப்புதல் என்பவற்றை நோக்கி அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சர்வமத நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் மேம்படுத்தலுக்காக இந்த அமைச்சுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள செயல்பணிகளை ஒருங்கிணைத்தல் இப்பதவியின் பிரதான இலக்கு மற்றும் செயல்பணிகளாகும் என்று நியமனக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# நல்லாட்சியை முன்னேற்ற தவறிவிட்டது அரசாங்கம்

கொழும்பு, ஜூன் 10

சர்வதேச நாணய நிதியம் நடைமுறைத் திட்டத்தின் மூன்றாவது பணக் கொடுப்பனவுக்கான ஒப்பந்தத்தில் ஜூன் 12 ஆம் திகதி கைச்சாத்திடவுள்ளது. ஆனால், இலங்கை தனது பொருளாதார மீட்புக்கான அடிப்படை நல்லாட்சியை முன்னேற்றுவதற்கு தவறிவிட்டது.

அண்மையில் வெரிட்டே நிறுவனத்தின் கண்காணிப்பின் 2024 மே மாத தரவுகளின் அடிப்படையில், டிசெம்பர் 2023இல் புதிப்பிக்கப்பட்ட திட்டத்தின்படி, 25 வீத வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

இந்தத் திட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய 63 வாக்குறுதிகளில் 32 வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டும், 16 வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமலும், 15 அறியப்படாமலும் உள்ளன. (தரவுகள் கிடைக்காததால் உண்மைத்தன்மையைக் கண்டறிய முடியவில்லை.)

நிறைவேற்றப்படாத 16 வாக்குறுதிகளை ஆராயும்போது நல்லாட்சியில் தோல்வி ஏற்படும் என்ற முடிவுக்கு வந்துள்ளது.

16 வாக்குறுதிகளையும் ஆய்வு செய்யும்போது அவற்றில் 7 நிதி முகாமைத்துவம், 6 நிதி வெளிப்படைத்தன்மை, 3 ஊழல் எதிர்ப்பு அளவீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (எ)

# மன்னாரில் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஜூன் 10

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் நுவரெலியா மாவட்டத்திலும் சில இடங்களில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகளவான மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், வடமத்திய மாகாணத்திலும் மன்னார் மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

ஊவா மாகாணம், அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் மாலை அல்லது இரவு வேளையில் ஒரு சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும், வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் 40 - 50 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையுடன் தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய அபாயங்களைக் குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org